வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 19.11.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 349 | பக்கங்கள் : 16




## மாவீரர் குடும்பங்களின் வீடுகளில் தகவல் திரட்டுகின்றது இராணுவம்

*கிளிநொச்சி, நவ. 19*

கிளிநொச்சியில் மாவீரர் குடும்பங்களின் வீடுகளுக்கு செல்லும் இராணுவத்தினர் அவர்கள் தொடர்பில் விவரங்களை பதிவு செய்து வருகின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றைய தினம் திருநகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இராணுவத்தினர் மாவீரர்

15

## கார்த்திகை தீபம் ஏற்றியவர்களுக்கு முல்லைத்தீவில் படைகளால் இடையூறு

*முல்லைத்தீவு, நவ. 19*

கார்த்திகை தீபத் திருநாளான நேற்று வீடுகளில் தீபங்கள் ஏற்றியவர்களை முல்லைத்தீவு இராணுவமும் புலனாய்வு பிரிவினரும் விசாரித்ததுடன் மிரட்டியும் சென்றனர் என்று தெரிய வருகின்றது.

துன்பங்கள் விலகி - செல்வம் பெருக இந்துமதத்தை பின்பற்றும் தமிழ் மக்கள் கார்த்திகை தீபத் திருநாளில் தீபங்கள் ஏற்றி கொண்

15

### சர்வதேச தலையீட்டுக்கு இடமளித்தோமாயின்

# நாட்டில் இரத்த வெள்ளம் இன்னும் பாய்ந்திருக்கும்



### பிரதமர் மஹிந்த சொல்கிறார்

அநுராதபுரம், நவம்பர் 19

“எமது இராணுவத்தை மறந்து விட்டு வெளிநாட்டு படைகளையும், வெளிநாட்டு தலையீடுகளையும் அனுமதித்தால் எமது நாட்டில் இன்னும் இரத்த வெள்ளம் பாய்ந்திருக்கும். இராணுவத்தினரின் சுதந்திரத்தை பாதுகாப்பை எதிர்காலத்தில் உருவாகும் தலைவர்களும் பொறுப்பேற்க வேண்டும்” என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

15



## யாழ்.பல்கலையில் தடைகளையும் மீறி நேற்று மாலை ஒளிர்ந்த கார்த்திகை தீபம்!

*யாழ்ப்பாணம், நவ. 19*

யாழ். பல்கலைக் கழகத்தில் தடைகளையும் மீறி மாணவர்களால் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டது.

தமிழர்களின் பாரம்பரிய விழாக்களில் ஒன்றான கார்த்திகை விளக்கீடான நேற்று பல்வேறு

15

## 737 பேருக்கு கொரோனா தொற்று

*கொழும்பு, நவ. 19*

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 737 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 54 ஆயிரத்து 459 ஆக அதிகரித்துள்ளது.

15



கார்த்திகை தீபத்திருநாளை நேற்று இந்துத் தமிழ் மக்கள் வீடுகளில் கொண்டாடி மகிழ்ந்த தருணத்தில்...! இடம் – யாழ்ப்பாணம் – படம் – ஐ. சிவசாந்தன்.

## தமிழர் பிரச்னை தீர்வுக்கு 13ஆம் திருத்தமே ஒரே வழி!

### பிரிட்டன் தூதுவரிடம் ரெலோ

*கொழும்பு, நவ. 19*

தமிழ் மக்கள் முகம் கொடுத்திருக்கும் முக்கிய பிரச்னையான காணி அபகரிப்பு, இன குடிப்பரம்பல் சிதைப்பு என்பவற்றை தடுத்து நிறுத்தும் முயற்சியாக ஐ. நா. பிரேரணையில் பரிந்துரைக்கப்பட்ட

15

## கொரோனா தொற்றால் மேலும் 15 பேர் மரணம்

*கொழும்பு, நவ. 19*

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 15 பேர் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின்

15

## மகேஷ் சேனநாயக்கவுக்கு அமெரிக்காவின் உயர்விருது

*கொழும்பு, நவ. 19*

முன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவுக்கு இன்ரர்நஷனல் ஹோல் ஒவ் பேம் (International Hall of Fame) விருதை

15




**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இந்திய தூதரகத்தை படமெடுத்த மூன்று பாகிஸ்தானியர்கள் கைது

கொழும்பு, நவ. 19

கொழும்பு - தர்ஸ்டன் வீதியில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை படம் எடுத்த பாகிஸ்தான் பிரஜைகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி மூவரும் முச்சக்கர வண்டியில் பயணித்தபோது குறித்த வாசஸ்தலத்தை படம் எடுத்ததுடன், ஒளிப்பதிவும் செய்தனரென கொள்ளுப்பிட்டி பொலிஸாருக்கு அளித்த முறைப்பாடுகளுக்கமைய, சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 25ஆம் திகதி வரை நாட்டை விட்டு வெளியேறத் தடைவிதித்தும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# களைநாசினிகளுடன் யாழில் இருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 19

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட, தடை செய்யப்பட்ட களை நாசினிகளுடன் சுன்னாகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமானப்படையின் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நடத்திய சுற்றிவளைப்பிலேயே இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 1,251 பைக்கெற்களில் பொதியிடப்பட்ட களை நாசினி கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் வங்காலை மற்றும் சங்கானையை சேர்ந்த 48 மற்றும் 60 வயதான இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

## மரண அறிவித்தல்

பிறப்பு
23 - 12 - 1937



இறப்பு
11 - 11 - 2021

### வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம்

(உரும்பிராய் இந்துக்கல்லூரி முன்னாள் ஆய்வுக்கூட உதவியாளர்)

கோப்பாய் டச்சு வீதியைப் பிறப்பிடமாகவும், லண்டன் Walthamstow ஐ வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம் அவர்கள் 11.11.2021 வியாழக்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சேனாதிராசா - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தாதேவி அவர்களின் ஆருயிர்க் கணவரும், சுபாங்கி(லண்டன்), சுபாணி(கனடா), சுபாகரன் (கரன்-லண்டன்), சுபத்திரா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரன்(லண்டன்), சிவலோகநாதன்(ஜெயந்தன்- கனடா), காயத்திரி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,காலஞ்சென்ற சொர்னா மற்றும் அன்னரத்தினம், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி (தவமணி), தெய்வேந்திரம் மற்றும் புவனேஸ்வரி, இராசலட்சுமி, பேரின்பநாயகன்(ராஜன்- லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், மயில்வாகனம், வேலுப்பிள்ளை, பாக்கியம், தேவராசா, செல்வராசா, தர்மலிங்கம் மற்றும் தர்மகுலசிங்கம்(வெள்ளை குட்டி), பராசக்தி, பரமேஸ்வரி, சரஸ்வதி, ஷாமா ஆகியோரின் அன்பு மைத்துனரும்,ரிஷன், பிருந்தன், அபிராமி, அனிஸ், லக்ஷிகா, சங்கவி, ஆரணி, ஆதவி, அக்ஷயா, அன்ஷிகா, தருணிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

பார்வைக்கு
Saturday, 20 Nov 2021 9:30 AM - 12:30 PM
H L Hawes & Son Ltd 106 Tanners Ln, Ilford IG6 1QE, United Kingdom

கிரியை
Monday, 22 Nov 2021 11:00 AM - 3:00 PM
Aldersbrook Bowls Club 34 Aldersbrook Rd, London E12 5DY, United Kingdom

தகனம்
Monday, 22 Nov 2021 3:15 PM
Manor Park Cemetery & Crematorium Sebert Rd, London E7 0NP, United Kingdom

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**சுபத்திரா (மகள்)**
+447448293441

தகவல்:
**குடும்பத்தினர்.**

## சிறுமியை இழுத்துச் சென்ற 17 வயது சிறுவன் கைதானர்

முல்லைத்தீவு, நவ. 19

முல்லைத்தீவு தீர்த்தக்கரை பகுதியில் வீதியால் சென்ற ஆறு வயது சிறுமியை பாழடைந்த வீட்டிற்குள் இழுத்து சென்ற 17 வயது சிறுவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தீர்த்தக்கரை அன்னை வேளாங்கன்னி ஆலயத்துக்கு அருகிலேயே இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றது.

குறித்த சிறுவன் கடைக்கு சென்று திரும்பிய சிறுமியைக் கூப்பிட்டு வாயைப் பொத்தி அருகிலுள்ள பாழடைந்த வீட்டுக்குள் இழுத்து சென்றுள்ளார். அவரின், கையை தட்டிவிட்டு ஓடி வெளியே வந்த சிறுமி சத்தமிட்டுள்ளார். அதன் பின்னர், அயலவர்கள் ஓடிவந்து காப்பாற்றியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் 17 வயது சிறுவனை கைது செய்தனர். (ஐ)

## குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தில் 272 வெற்றிடங்கள்

கொழும்பு, நவ. 19

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தில் 272 வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் தெரியவந்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் அண்மையில் நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

குடிவரவு - குடியகழ்வு திணைக்களத்தில் சிரேஷ்ட மட்டத்தில் 18, மூன்றாம் நிலையில் 113, இரண்டாம் நிலையில் 121, முதல் நிலையில் 19, வேறு பதவியில் ஒரு வெற்றிடமும் நிலவுகின்றன.

இந்த வெற்றிடங்களால் திணைக்களத்தின் செயல்பாடுகளை வினைத்திறனாக முன்னெடுப்பதில் இடையூறுகள் ஏற்பட்டிருப்பதாகவும் அத்திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

## வடமாகாண மரநடுகை மாதம் 19 கார்த்திகை 2021

**"உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும் செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயல்களின் பிரதிபலிப்பே"**
**- மகாத்மா காந்தி (இந்திய தேசபிதா)**

### கல்வி TV CHANNEL-1 — 19.11.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறுஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

### கல்வி TV CHANNEL - 2 — 19.11.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | சிங்களம் |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
19.11.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# ஆட்சிக்கவிழ்ப்பு...?

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற எதிர்ப்பு போராட்டத்தில் உரையாற்றிய அரசியல்வாதிகள் பலரும், ஆட்சிக் கவிழ்ப்பு பற்றியே பேசியிருக்கின்றனர். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் அவரின் பங்குக்கு, இந்த அரசாங்கத்தை ஆட்சி கதிரையிலேற்றிய சிங்கள மக்களே, இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பவர் என ஆருடம் கூறியிருக்கின்றார். அரசாங்கங்கள் வீழ்ச்சியடைவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. 2015இல் மைத்திரியை தெரிவு செய்த மக்கள்தான் பின்னர் மீளவும் ராஜபக்ஷக்களை ஆட்சி கதிரைக்குக் கொண்டுவந்தனர். எனவே, சிங்கள மக்கள் மீளவும் புதிய ஆட்சி ஒன்றுக்கு ஆதரவளித்தால் அதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

ஆனால், இது பற்றி தமிழர் தரப்புக்கள் பேசுவதுதான் ஆபத்தானது. ஏனெனில், தமிழர்கள் ராஜபக்ஷக்களை எதிர்க்கும்போது, அது எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தலாம். பெரும்பான்மையான சிங்கள மக்கள், ராஜபக்ஷக்களை யுத்த வெற்றியின் சொந்தக்காரர்களாகவே பார்க்கின்றனர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த வெற்றியில் பல்வேறு காரணங்கள் செல்வாக்குச் செலுத்தியிருந்தன. இதில், பிராந்திய மற்றும் உலகளாவிய காரணங்கள் பிரதானமானவை. அதேவேளை, விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை அனைத்து அரசாங்கங்களும் மேற்கொண்டிருந்தன.

அந்த யுத்தத்தை இறுதியாக முன்னெடுத்தவர்கள்தான் ராஜபக்ஷக்கள் ஆவர். பல்வேறு தரப்புக்களாலும் பலவீனப்படுத்தப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பு இறுதியில் ராஜபக்ஷக்களின் காலத்தில் முற்றிலுமாக வீழ்த்தப்பட்டது. விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் தலைவர் கொல்லப்பட்டார். இந்த விடயம் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றதால், விடுதலைப் புலிகளை வீழ்த்திய முழுப் பெருமையையும் ராஜபக்ஷக்கள் மட்டுமே தட்டிக்கொண்டனர். இதுவே, அவர்களின் அரசியல் முதலீடாகவும் மாறியது. இன்றுவரை இந்த முதலீடு தென்னிலங்கையில் நல்ல இலாபத்தை கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

இந்த விடயங்களை கருத்தில் கொண்டுதான் சம்பந்தன் ஆட்சிக் கவிழ்ப்பு தொடர்பில் வாயை திறக்க வேண்டும். ஏதோ அரசியலில் நாங்களும் இருக்கின்றோம் என்பதை காண்பிப்பதற்காக பேசக் கூடாது. சம்பந்தன் கூறினாலும் அல்லது கூறாவிட்டாலும் வட, கிழக்கை சேர்ந்த தமிழ் மக்கள் பெரும்பான்மையாக மொட்டு அணியை ஆதரிக்கப் போவதில்லை. ஒருவேளை முஸ்லிம் மக்கள் வாக்களித்தாலும்கூட, தமிழ் மக்கள் வாக்களிக்கப் போவதில்லை. இது ராஜபக்ஷக்களுக்கும் நன்கு தெரியும். இதனால்தான் அவர்கள் சிங்கள மக்களை திருப்திப்படுத்துவதில் மட்டும் முதன்மையான கவனத்தை செலுத்தி வருகின்றனர். இதன் காரணமாகத்தான் ஜனாதிபதி தன்னையொரு சிங்கள – பௌத்த தலை வனாக அறிவித்திருக்கின்றார்.

ஆட்சிக் கவிழ்ப்புக்கள் ஏற்படலாம் – ஆட்சி மாற்றங்கள் ஏற்படலாம். அது சாதாரணமான ஒன்று. அவ்வாறானதொரு மாற்றம் ஏற்பட வேண்டுமாயின் அது, சிங்கள மக்கள் மத்தியில்தான் நிகழவேண்டும். ஆனாலும் 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை முற்றிலுமாக தக்க வைத்துக் கொள்ள அப்போதிருந்தவர்களால் முடியவில்லை என்பதும் உண்மை. இதில் சம்பந்தனுக்கும் ஒரு முக்கியமான பங்குண்டு.

ரணில் – மைத்திரி ஆட்சியின் தோல்வியில் பல காரணங்கள் செல்வாக்கு செலுத்தியிருந்தாலும்கூட, ரணில் – சம்பந்தன் தரப்பு புதிய அரசியல் யாப்பு தொடர்பில் கவனம் செலுத்தியமையும் ஒரு பிரதான காரணமாகும். ஆட்சி மாற்றத்தை முழுமையாக தக்கவைப்பதற்கான விடயங்களை மேற்கொள்வதற்கு முன்னதாக – நாட்டின் அடிப்படைகளில் மாற்றங்களை ஏற்படுத்த முற்பட்டமையானது ஒரு பாரிய தவறாகவே அமைந்தது. அந்தத் தவறுகளிலிருந்து சம்பந்தன் தரப்பு இன்னும் எதனையும் கற்றுக்கொள்ளாமல் இருப்பதுதான் இன்னும் தவறானது.

# ரூ.300 கோடி அறிவிப்பு: காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் எதிர்வினை என்ன?

ரஞ்சன் அருண் பிரசாத்

*இலங்கை உள்நாட்டு போரின் காரணமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான பிரச்னை, யுத்தம் நிறைவடைந்து 12 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இன்றும் முடிவின்றி தொடர்கிறது.*

*யுத்தம் நிறைவடைந்த பின்னர், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பல்வேறு விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தாலும், அதற்கான தீர்வு இன்று வரை கிடைக்கவில்லை.*

*இவ்வாறான பின்னணியில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அன்று முதல் இன்று வரை தொடர் போராட் டங்களை முன்னெ டுத்து வருகின்றனர்.*

*இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் இந்த போராட்டங் கள் தொடர்ந்தும் முன்னெடுக் கப்பட்டு வருகின்ற நிலையில், அவ்வப்போது, தலைநகரிலும் போராட்டங்களை நடத்த வலிந்து ககாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் கள், அரசியல் வாதிகள், சமூக செயற்பாட் டாளர்கள் மறப்பதில்லை.*



*அரசாங்கங்கள் மாறினாலும், காணாமல் ஆக்கப்பட்டோரின் விடயத்திற்கு தீர்வு கிடைக்கவில்லை.*

*இந்த நிலையில், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் பல மாவட்டங்களிலும் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், அதற்கான தீர்வு அந்த அலுவலகத்தினால் வழங்கப்படவில்லை.*

*யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திற்கு குற்றஞ்சுமத்தப்பட்ட ஆட்சியாளர்களே தற்போது ஆட்சி பீடத்திலுள்ள நிலையில், அந்த ஆட்சியாளர்களிடமே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகளை தேடித் தருமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.*

*இவ்வாறான பின்னணியில், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக ஆளும் அரசாங்கத்தை பிரதி நிதித்துவப்படுத்தும், கடற்றொழில் அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். வடக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற் கொள்ளும் எதிர்வரும் சில நாட்களில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் களை சந்தித்து, கலந்துரையாடல்களை நடத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்து வருகிறார் எனவும் அவர் கூறினார்.*

*பல்வேறு காரணங்களினால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான விவகாரத்திற்காக எதிர்வரும் 2022ம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில், அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.*

*காணாமல் போனோர் விவகாரத்திற்காக 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ, 2022ம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தை சமர்பித்து உரை நிகழ்த்திய போது கூறியிருந்தார்.*

*எனினும், இந்த நிதி காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் எந்த நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து, அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அன்றைய தினம் தெளிவூட்டல்களை வழங்கவில்லை.*

*இவ்வாறான நிலையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் எதிர்வினையாற்றத் தொடங்கியுள்ளனர்.*

*காணாமல் போனோரின் உறவுகள் விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டுமே தவிர, நிதி தேவையில்லை என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சங்கத்தின் செயலாளர் சி.ஜெனிற்றா தெரிவித்துள்ளார்.*

*காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் நீதி வேண்டும் என்பதை தவிர, நிதி தேவையில்லை என்ற விடயத்தை இந்த நாட்டிற்கும், சர்வதேசத்திற்கும் தாம் தெளிவாக கூறியுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.*

*தமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்பது கண்டறியப்பட வேண்டும் எனவும், அதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறுகின்றார். இந்த கோரிக்கையை முன்வைத்தே, தாம் மழை வெயில் பாராது, வீதிகளில் இறங்கி போராடி வருவதாகவும் அவர் தெரிவிக்கின் றார்.*

*வரவு - செலவுத்திட்டத்தில் 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையானது, தமக்காக ஒதுக்கப்பட்ட நிதி கிடையாது எனவும் அவர் கூறுகின்றார்.*

*காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை சாட்டாக வைத்துக்கொண்டு, தமது பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு வழங்குவதற்காகவே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சுமத்துகின்றார்.*

*வரவு செலவுத்திட்டத்தில் 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை தாம் முழுமையாக நிராகரிப்பதாக அந்த சங்கத்தின் செயலாளர் சி.ஜெனிற்றா தெரிவித்துள்ளார்.* ●

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**நவம்பர் - 19 வெள்ளிக்கிழமை**
**பிலவ வருடம் - கார்த்திகை- 03**
**நல்ல நேரம் : 9.00 - 10.30**
**ராகு காலம் : 10.30 - 12.00**
**திதி : அதிதி**




**மேடம்**
விழிப்புணர்ச்சியுடன் செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள். பலர் பாராட்டும் செயல் ஒன்றைச் செய்து பெருமிதம் அடைவீர்கள். எடுத்த விஷயம் ஒன்று சிறு தடைகளுக்குப் பிறகு நிறைவேறும்.

**இடபம்**
வாகனத்தைச் சீரமைப்பீர்கள். மகிழ்விக்கும் செய்தி உண்டு. பணியாளர்களுக்கு நல்ல செய்தி உண்டு. புதிய வாகனம் வாங்குவீர்கள். பதற்றமான நிலை மாறும். கோபத்தை கட்டுப்படுத்துவீர்கள்.

**மிதுனம்**
சகபணியாளர்கள் தந்த சிறு தொல்லைகள் நீங்கும். இளைஞர்கள் வாழ்வில் உயர்வதற்கான வழியைத் தேர்ந்தெடுப்பீர்கள். பணியாளர்கள் முனைப்புடன் உழைத்துப் பாராட்டுப் பெறுவீர்கள்.

**கடகம்**
சம்பள உயர்வு வரும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். உற்ற நண்பர்களுடன் சிறு கருத்து வேற்றுமை ஏற்பட்டுச் சரியாகும். பணியில் இருந்த பிரச்னை நீங்கும். பொறுப்பை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்**
மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய அனுபவங்கள் கிடைக்கும். உங்களது பேச்சிற்கு மதிப்பு கூடும். நெருக்கமானவருக்கு நன்மை வரும். குடும்பத்தில் குதூகலத்தை தரப்போகிறது.

**கன்னி**
பணியாளர்களுக்கு வாக்கு வன்மை அதிகரிக்கும். பண வரவு தேடி வரும். மனஅழுத்தும் தீரும். நட்பு வட்டம் விரியும். உங்களது பணியிலும், தாயின் ஆரோக்கியத்திலும் கவனம் தேவை.

**துலாம்**
உங்களது கவனக்குறைவால் யாரையும் பகைக்க வேண்டாம். சகோதரர் வீட்டு விஷேசங்களில் பங்கேற்பீர்கள். உங்களுக்கு பாராட்டு கிடைக்கும். உங்களுக்குள்ள தனித் திறமைக்கு அங்கீகாரம்.

**விருட்சிகம்**
இடமாற்றம், பணி மாற்றம் வரலாம். பணியிடத்தில் உங்களுக்கு மரியாதை அதிகரிக்கும். முயற்சி கைகூடும். உங்களின் புகழ் கூடும். புதிய தொழில் தொடங்கும் திட்டம் நிறைவேறும்.

**தனுசு**
அலுவலகத்தில் ஏற்பட்ட பிரச்னை அகலும். தாய்க்கு உயர்வு வரும். மகிழ்ச்சி உண்டு. மதியம் நல்ல செய்தி ஒன்று வரும். பிறருடன் மனம் விட்டுப் பேசி சில பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள்.

**மகரம்**
விருப்பப்படி விஷயங்களை முடிக்கும் பிடிவாதம் உங்களுக்கு வரும். உங்களுக்கு தொல்லை தந்த எதிரியின் பலம் குறைந்து நிம்மதி வரும். புது விஷயத்தில் ஈடுபாடு வரும். தந்தையின் பரிவு கூடும்.

**கும்பம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். திடீர்ப் பயணம் உண்டாகும். எதிலும் அவசரம், பதற்றம் வேண்டாம். கலகலப்பான நாள். பணவரவு இருக்கும். படிப்படியாக முன்னேற ஆரம்பிப்பீர்கள்.

**மீனம்**
புதுமனை கட்டிக் குடியேறும் எண்ணம் மேலோங்கும். குடும்ப முன்னேற்றம் கருதி செய்த செலவுக்குப் பலன் உண்டு. காலை நேரத்திலேயே மனம் நிறையும் செய்திகள் வந்து சேரும்.

# ராஜீவ் காந்தி கொலை வழக்கு கைதி ரவிச்சந்திரனுக்கு 30 நாள் பரோல்



மதுரை, நவ. 19

ராஜீவ் கொலை வழக்கில் மதுரை சிறையிலுள்ள ரவிச்சந்திரனுக்கு 30 நாள் பரோல் கிடைத்ததையடுத்து அவர் பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று முன்தினம் சொந்த ஊருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 7 பேர் சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர். இவர்களில் ஒருவரான தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் அருகிலுள்ள சூரப்பநாயக்கன்பட்டியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

ரவிச்சந்திரனின் தாயார் ராஜேஸ்வரி, தனக்கு உடல் நிலை பாதித்த நிலையில், மகன் அருகில் இருந்து கவனிக்கும் வகையில் அவருக்கு 30 நாள் பரோல் வழங்கவேண்டும் என உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் மனுத்தாக்கல் செய்தார். இந்த மனுவைப் பரிசீலிக்க தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றக்கிளை உத்தரவிட்டது.

இதற்கிடையே தனது மகனுக்கு பரோல் கேட்டு ரவிச்சந்திரனின் தாயார் ராஜேஸ்வரியும் முதல்வர் ஸ்டாலினுக்கு மனு அனுப்பியிருந்தார். இதைத் தொடர்ந்து தமிழக அரசு ரவிச்சந்திரனுக்கு நவம்பர் 14ஆம் திகதி முதல் 30 நாட்கள் பரோல் வழங்கி ஆணை பிறப்பித்தது.

ஆனால், கன்னியாகுமரி மாவட்ட வெள்ள சேதப் பகுதிகளை நவம்பர் 15இல் முதல்வர் பார்வையிட வந்ததால் அவரின் பாதுகாப்பு பணிக்காக பொலிஸார் சென்றுவிட்டனர்.

இதனால், ரவிச்சந்திரனுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க இயலாத நிலை ஏற்பட்டதாக சிறை நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப் பட்டது. இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் ரவிச்சந்திரன் மதுரை மத்திய சிறையில் இருந்து அவரது சொந்த ஊருக்கு அழைத்துச் செல்லப் பட்டார்.

# மிதிவண்டி பயணத்தை தமிழ்நாடு முழுவதும் கட்டாயமாக்க வேண்டும்

## ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, நவ. 19

காற்று மாசுபடுவதைத் தடுத்து சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக மிதிவண்டிப் பயணத்தை தமிழ்நாடு முழுவதும் கட்டாயமாக்க வேண்டும் என்று ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

“தமிழ்நாட்டில் காற்று மாசைக் கட்டுப்படுத்துவதற்கான சிறிய, ஆனால், மிகவும் பயனளிக்கக்கூடிய திட்டத்தை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு சபை தொடங்கியுள்ளது. சென்னையில் உள்ள வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களும் வாரந்தோறும் புதன்கிழமைகளில் இருசக்கர வாகனங்களிலோ, கார் உள்ளிட்ட வாகனங்களிலோ அலுவலகம் வரக் கூடாது என்று தடை விதிக்கப் பட்டுள்ளது.

அதை மதித்து வாரியத்தின் தலைவர் உதயன் தமது இல்லத்திலிருந்து அலுவலகத்திற்கு மிதிவண்டியில் பயணம் செய்திருக்கிறார். பெரும்பான்மையான ஊழியர்கள் மிதிவண்டிகள் மூலமாகவும், வெகுதொலைவிலிருந்து வரும் பணியாளர்கள் பொதுப் போக்குவரத்து மூலமும் அலுவலகம் சென்றுள்ளனர்.

மிதிவண்டி மற்றும் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற நடைமுறை முதற்கட்டமாக தமிழ்நாட்டில் அனைத்து அரசு அலுவலகங்கள், தனியார் அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு நீட்டிக்கப்பட வேண்டும். அடுத்தகட்டமாக தமிழ்நாட்டின் அனைவரும் வாரத்தில் ஒரு நாள் இதைக் கடைப்பிடிப்பதை நோக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும். அதற்குத் தேவையான தனிப்பாதை உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளையும் அரசு மேம்படுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன்.” இவ்வாறு ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் கன மழை எச்சரிக்கை

சென்னை, நவ. 19

சென்னையில் அடுத்த 24 மணி நேரத்திற்கு நகரின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன முதல் மிக கன மழையும், ஓரிரு இடங்களில் அதி கன மழையும் பெய்யக் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்க கடல் பகுதியில் நிலவிய உள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தமிழகத்தில் நேற்று முதல் 5 நாட்களுக்கு கனமழை பெய்யும் என வானிலை ஆய்வுமையம் தகவல் தெரிவித்திருந்தது.

இது தொடர்பாக வானிலை ஆய்வுமையம் வெளியிட்டுள்ள தகவலில், தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்க கடல் பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுப்பெற்று நேற்று காலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக தென் மேற்கு வங்க கடல் மற்றும் வட தமிழக கடலோர பகுதியில் நிலைகொண்டுள்ளது, இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று காலை சென்னைக்கு அருகில் கரையை கடக்க கூடும்.

இதன் காரணமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர், வேலூர், இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், சேலம் மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன முதல் மிக கன மழையும், ஓரிரு இடங்களில் அதி கன மழையும், அரியலூர், பெரம்பலூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, நாமக்கல் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன முதல் மிக கன கன மழையும், திருச்சிராப்பள்ளி, கரூர் திருப்பூர், கோயம்புத்தூர், நீலகிரி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும், ஏனைய மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் மிதமான மழையும் பெய்யக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் உரிமையை எவரும் தடுக்கமுடியாது

## தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 19

**எதிர்க்கட்சியினர் என்ற ரீதியில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை காணப்படுகிறது. ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கான உரிமையை எவராலும் தடுக்க முடியாது என்று சிறீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**


சுதந்திரக் கட்சியின் புதிய தொகுதி அமைப்பாளர்களை நியமிப்பதற்கான நேர்முகத் தேர்வு நேற்று முன் தினம் புதன் கிழமை கட்சி தலைமையகத்தில் இடம்பெற்றது இதன் போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்க்கட்சியினர் என்ற ரீதியில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை காணப்படுகிறது. எவ்வாறிருப்பினும் கோவிட் நிலைமையைக் கருத்திற் கொண்டு அதற்கு ஏற்றால் போல் ஏற்பாடுகளை செய்திருக்கலாம். காரணம் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் அவை தொடர்பில் கவனம் செலுத்த முடியாது.

பெரும்பாலானவர்கள் ஒரே இடத்தில் கூடியிருக்கும்போது எவ்வாறு தொற்று பரவும் என்பதை அனைவரும் அறிவர். எவ்வாறிருப்பினும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கான உரிமையை எவராலும் தடுக்க முடியாது. நாம் வேறு பயணத்தை ஆரம்பிக்கவில்லை.

மாறாக கட்சியை மேலும் வலுப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். கட்சியை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வோம்-என்றார்.



## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஐந்து வாகனங்கள் மோதி விபத்து!

கொழும்பு, நவ. 19

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவை நுழைவாயிலிற்கு அருகில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற விபத்தால், கொட்டாவை நுழைவாயிலுக்கு அருகில் இருந்து மாத்தறை நோக்கிய திசையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

மூன்று கார்கள், ஒரு பேருந்து, ஒரு லொறி என்பன ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன. சிறிய ரக லொறி ஒன்று அவ்வழியாக சென்ற பேருந்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வாகனங்கள் நீண்ட நேரம் நிறுத்தப்பட்டன.

## பதுளையில் இரு மாணவர்களின் உயிரை பறித்த டெங்கு காய்ச்சல்

கொழும்பு, நவ. 19

பதுளை பொது சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இரு மாணவர்கள் உள்ளிட்டு மூவர் டெங்குக் காய்ச்சலினால் உயிரிழந்தனர். அத்துடன், 261 பேர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக் கப்பட்டுள்ளனரென்று, பதுளை பொது சுகாதார சேவை பணியகம் தெரிவித்துள்ளது.

பதுளையில் 'டெங்கு' தடுப்பு வேலைத்திட்டத்தினை பதுளை மாநகர சபையினர், பிரதேச செயலகத்தினர், பொலிஸ் நிலையத்தினர், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த தினங்களில் பதுளையில் 450 கட்டடத் தொகுதிகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றில் அரச உத்தியோகத்தர்களின் அரச வீடுகள், அரச நிறுவனங்கள் உள்ளிட்ட 25 இடங்கள், 'டெங்கு' நுளம்புகள் பரவக்கூடிய இடங்களாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட 25 இடங்களின் பொறுப்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட 261 பேருக்கும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. (அ)

## சாரதி அனுமதி பத்திரத்துக்கான பரீட்சை பரீட்சைத் திணைக்கள கண்காணிப்பில்!

கொழும்பு, நவ.19

சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான எழுத்து மூல பரீட்சையை பரீட்சைகள் திணைக்களத்தின் கண்காணிப்பில் கீழ் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் முதல் இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்த எதிர்பார்த்துள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியதன் பின்னர் அதிகமானோர் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்காக கோரிக்கை விடுப்பதை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதற்கிணங்க, தாம் வதியும் இடத்திலேயே சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான எழுத்துமூலப் பரீட்சையில் தோற்றும் சந்தர்ப்பம் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நாளாந்த சேவைகளைப் பெறுவதற்கு, முன்னதாகவே நாள் மற்றும் நேரத்தை ஒதுக்கிக்கொள்ளவேண்டும் என திணைக்களம் அறிவித்துள்ளது.

## முகத்தின் மீது கோபம் எனில் மூக்கை வெட்டிக் கொள்வதா?

### எதிரணியிடம் விமல் கேள்வி

கொழும்பு, நவ. 19

முகத்தின்மீது கோபத்தில் மூக்கை வெட்டிக் கொள்வதைப் போன்று அரசின் மீதான கோபத்திற்காக முழுநாட்டிலும் கோவிட்டை பரப்ப வேண்டாம் என்று எதிரணியிடம் கோருகிறோம். எதிர்ப்பை தெரிவிக்க எத்தனையோ மாற்று வழிகள் இருக்கின்றன. இதுகூட தெரியாதவர்களால் எப் படி ஆட்சியை பிடிக்க முடியும் என கைத் தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்ட நான்காம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உங்கள் அரசு இன்றிருந்தாலும் இதே நெருக்கடிகளை சந்தித்திருக்கும். பாரிய உற்பத்தி மறுமலர்ச்சியை நோக்கிப் பய ணிக்கவேண்டியுள்ளது. நல்ல நோக்கத்துடனே சேதனப் பசளை பயிர்ச்செய்கையை ஜனாதிபதி அறிமுகப்படுத்தினார்.

நல்லநோக்கம் மற்றும் அது வெற்றி பெற போதுமானதல்ல. விவசாயிகளுக்கு பசளை வழங்கும் பொறுப்பை உரக் கம்பனிகளுக்கு வழங்கியது ஜே. ஆர் தான். ஆனால், அதற்கு முன்னர் பயிர் அதிகாரி ஒருவரே இருந்தார். அவர்தான் நிலத்திற்கு உகந்த பசளையை அவர் பரிந்துரைப்பார். 100 வீதம் சேதனப் பசளை பயன்பாடு என்றோ 100 இரசாயனப் பசளை பயன்பாடு என்றோ தீர்மானித்து இதனை மேற்கொள்ள முடியாது. வர்த்தக நோக்கிலான பயிர்ச்செய்கையில் அதற்கு ஏற்றவாறான வாய்ப்பு இருக்க வேண்டும். வெளிநாட்டில் இருந்து அரிசி இறக்குமதி செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. ஆனால், உணவு தட்டுப்பாடு ஏற்படலாம் என பல நாடுகள் தமது அரிசி கையிருப்பை விற்பதை நிறுத்தியுள்ளன. எத்தகைய குறைபாட்டை தெரிவித்தாலும் தடுப்பூசி ஏற்றுவதில் வெற்றி பெற்றுள்ளதை எதிரணி ஏற்க வேண்டும். உலகில் பழைய சம்பிரதாய முறைக்கு பதிலாக புதிய வழி களை தேடும் நிலையில் எதிர ணியும் புதிய வழிகளை பயன் படுத்தவேண்டும். பசுமை வல யத்தில் இருந்து சிவப்பு வல யத்துக்கு மாறினால் விமான நிலையங் களை மூட நேரிடும். சுற்றுலா பயணிகள் வருகை வீழ்ச்சி அடையும். எதிர்ப்பை முன்வைக்க புதிய வழிகளை தேடும் அளவு தொலைநோக்கம் இல்லாவிட்டால் எப்படி ஆட்சியைப் பிடிக்கப் போகிறீர்கள். முகத்தின் மீது கோபத்தில் மூக்கை வெட்டிக் கொள்வதைப் போன்று அரசின் மீதான கோபத் திற்காக முழுநாட்டிலும் கோவிட்டை பரப்ப வேண் டாம் என்று கோருகிறோம் - என்றார். (அ)



## உங்களால் வழிநடத்தப்படும் நான் மிகவும் அதிர்ஷ்டசாலி!

### மஹிந்தவுக்கு கோட்டாபய பிறந்த நாள் வாழ்த்து

கொழும்பு, நவ.19

எனது தனிப்பட்ட வாழ்க்கையிலும், அரசியல் வாழ்விலும் இத்தகைய மகத்துவம் கொண்ட ஒருவரால் வழிகாட்டப்படுவதால் நான் மிகவும் அதிர்ஷ்டசாலியாக உணர்கிறேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் 76 ஆவது பிறந்த நாளை ஒட்டி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியலில் அழியாத தடம் பதித்த எனது அன்புச் சகோதரரே, உங்களுக்கு எனது இனிய பிறந்தநாள் வாழ்த்துகள் என நேற்றுக் காலை தனது டுவிட்டரில் கோட்டாபய பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, பிறந்த நாளை பிரதமர் தனது வீட்டில் குடும்பத்தினருடன் கேக் வெட்டி கொண்டாடிய புகைப்படத்தை நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டரில் பகிர்ந்துள்ளார். (அ)

## இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் நீதிமன்ற பதிவாளர் ஒருவர் கைது!

கொழும்பு, நவ. 19

தெல்தெனிய மாவட்ட நீதிமன்றத்தின் பதிவாளர் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப் பட்டுள்ளார் எனது தெரிவிக் கப்படுகின்றது.

இவர் கடற்படை அதிகாரி ஒருவரிடம், 10,000 ரூபாய் இலஞ்சம் பெற முற்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கடற்படை அதிகாரியின் முறைப்பாட்டுக்கு அமைய தெல்தெனிய பகுதியில் உள்ள அரச வங்கி ஒன்றின் அருகில் இலஞ்சம் பெற முற்பட்ட சந்தர்ப்பத்தில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# ஓய்வுபெறும் வயதை நீடிப்பது நாட்டுக்குப் பேரழிவை தரும்!

## தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையம் சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 19

**அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 65ஆக நீடிப்பது நாட்டுக்கு பேரழிவு தரக்கூடிய விளைவுகளை ஏற்படுத்தும் என தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் மையம் தெரிவித்துள்ளது.**

தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் மையத்தின் தேசிய இணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க, இது பொதுச் சேவையை வினைத்திறனற்றதாக மாற்றும் என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச துறையில் பணியாற்றும் இளைஞர்களுக்கு தற்போது தமது கடமைகளை நிறைவேற்றும் சுதந்திரம் இல்லை. இலங்கையின் வரலாறு முழுவதும் அரச துறை முழுவதுமாக அரசியல்மயப் படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையானது நாட்டைப் புதிய திசை நோக்கி அழைத்துச் செல்லும் திறன் கொண்ட இளைஞர்களை அரச துறையில் விரக்தியடையச் செய்யும். அரசியல் உள் நோக்கங்களின்படி செயல்படும் பழைய அரசு ஊழியர்களின் கூட்டத்துடன் அரசுத்துறை எஞ்சியிருக்கும்.

அரச ஊழியர்கள் நாட்டுக்கு பாரம் என்று நிதியமைச்சர் தெரிவித்த கருத்து நகைச்சுவையானது.

2005-2006 காலப்பகுதியில் அரச துறையில் 600,000 பணியாளர்கள் மட்டுமே இருந்தனர். தற்போது 16 லட்சம் ஊழியர்களாக அதிகரித்துள்ளனர்.

தேர்தல் காலத்தில் வேலை வாய்ப்புகள் முக்கிய வாக்குறுதியாக இருப்பதால், இந்த எண்ணிக்கை அதிகரித்து வருவதற்கு அரசியல்வாதிகளே முழுப் பொறுப்பு - என்றார். (அ)



# வவுனியாவிலிருந்து திருமணத்துக்கு கொழும்பு சென்ற ஹைஏஸ் விபத்து!

## ஆறு பேர் படுகாயம்

வவுனியா, நவ. 19

பதிவு திருமணத்திற்காக வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற ஹைஏஸ் வாகனம் விபத்துக்குள்ளானதில் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வவுனியா - கொழும்பு வீதியில் உள்ள கல்கமுவை பகுதியில் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியுடன் ஹைஏஸ் வாகனம் நேற்று அதிகாலை மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இடம்பெற விருந்த தமது புதல்வியின் பதிவுத் திருமணத்துக்காக வவுனியா தோணிக்கல் பகுதியில் இருந்து சென்ற குடும்பத்தினரே விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

விபத்தில் வாகனச் சாரதி மற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் என 6 பேர் படுகாயமடைந்த நிலையில் கல்கமுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான இரு வாகனங்களும் கல்கமுவ பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது டன், மேலதிக மேலதிக விசாரணைகளை கல்கமுவை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# காய்ச்சல், இருமல் உள்ள சிறுவரை வீட்டில் வைத்துக் கொள்ளவேண்டும்

## பெற்றோர்களிடம் அரசு அறிவுறுத்து

கொழும்பு, நவ. 19

கல்வி நடவடிக்கையை தொடர்ந்து கொண்டு செல்வதற்கு நாட்டில் உள்ள மக்கள் பொறுப்புணர்வுடன் செயல்படவேண்டும் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

மேலும் கொரோனா அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் இருமல், காய்ச் சல் இருப்பவர்கள் வேலைக்கு செல்லவேண்டாம் எனவும் அவர் கூறினார்.

முக்கியமாக காய்ச்சல், இருமல் இருக்கும் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்பாமல் வீட்டில் வைத்துக் கொள்ளுமாறு பெற்றோர்களிடம் கோரிக்கை விடுப்பதாக அவர் தெரிவித்தார். (அ)

# அமைச்சுகள், அரச நிறுவனங்களின் சட்டக் கட்டமைப்பில் திடீர் மாற்றம்

கொழும்பு, நவ. 19

அரச நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்கள் தொடர்பான நிறுவன மற்றும் சட்ட கட்டமைப்பை திருத்தும் அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி, ஜனாதிபதி செயலகம், பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு மற்றும் நிதி அமைச்சு ஆகியவற்றின் நிறுவன மற்றும் சட்ட கட்டமைப்புகள் திருத்தப்பட்டுள்ளன.

வெளிவிவகார அமைச்சு, திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சு மற்றும் வெகுஜன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சின் நிறுவன மற்றும் சட்ட கட்டமைப்பானது நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

# தொற்றிலிருந்து மேலும் 372 பேர் பூரண குணம்

கொழும்பு, நவ. 19

கொரோனா தொற்றில் இருந்து மேலும் 372 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 525,560 ஆக அதிகரித்துள்ளது. (அ)

# பாடசாலை மாணவர்களுக்காக 1,400 பேருந்துகள் திங்கள் முதல்!

கொழும்பு, நவ. 19

1,400 'சிசு சரிய' பஸ்களும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சேவையில் ஈடுபடவுள்ளன என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கான பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படுவதால், அனைத்து தரங்களுக்கும் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கும் என்பதால் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

தேவைப்பட்டால் கூடுதல் பேருந்துகளைப் பெறுவதற்கு பிராந்திய டிப்போ மேலாளர்களைத் தொடர்பு கொள்ளுமாறு ஆணைக்குழு அதிபர்களுக்கு அறிவித்தது.

# இந்த நூற்றாண்டின் நீண்ட சந்திர கிரகணம் இன்று!

கொழும்பு, நவ. 19

இந்த நூற்றாண்டின் அபூர்வ நிகழ்வான, மிக நீண்ட சந்திர கிரகணம் இன்று வெள்ளிக்கிழமை நிகழவுள்ளதாக வானியல் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

சூரியன், நிலவு, பூமி மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரும்போது கிரகணங்கள் நிகழ்கின்றன. அப்போது நிலவின் நிழல் சூரியனை மறைத்தால் அது சூரிய கிரகணம் எனவும், பூமியின் நிழல் சந்திரனை மறைத்தால் அது சந்திர கிரகணம் எனவும் அழைக்கப்படுகிறது. ஆண்டு தோறும் சராசரியாக 4 கிரகணங்கள் வரை நிகழும்.

சந்திரனை பூமி முழுமையாக மறைத்தால் அது முழு சந்திர கிரகணம் என்றும், ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் மறைத்தால் அது பகுதி கிரகணம் என்றும் கூறப்படுகிறது.

அந்தவகையில் இந்த நூற்றாண்டின் நீண்ட சந்திரகிரகணம் இன்று நடைபெறவுள்ளது.

இலங்கை நேரப்படி முற்பகல் 11.32 முதல் மாலை 5.34 மணி வரை (6.02 மணி நேரம்) கிரகணம் நிகழும்.

இதற்குமுன் நீண்ட சந்திர கிரகணம் 1440ஆம் ஆண்டு பெப்ரவரி 18ஆம் திகதி ஏற்பட்டது. சுமார் 580 ஆண்டுகளுக்கு பின்பு தற்போதுதான் நெடிய கிரகணம் தோன்ற உள்ளது.

இத்தகைய நிகழ்வு மீண்டும் 2669ஆம் ஆண்டு பெப்ரவரி 8ஆம் திகதி தென்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திர கிரகணத்தை வடகிழக்கு ஐரோப்பா, கிழக்கு ஆசியா, பசிபிக் பெருங்கடல் பகுதிகள், அவுஸ்திரேலியா, வடக்கு மற்றும் தென் அமெரிக்கா உள்ளிட்ட இடங்களில் பார்க்க முடியும்.

# அவசரமாகக் கூடுகின்றன பிரதான முஸ்லிம் கட்சிகள்

கொழும்பு, நவ. 19

வரவு-செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பில் நடந்து கொள்ளவேண்டியவிதம் குறித்து தீர்க்கமான தீர்மானமொன்றை எடுப்பதற்காக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அவசரமாகக் கூடவுள்ளன.

20ஆவது திருத்தத்தின் போது முஸ்லிம் எம்.பிக்கள் அரசுக்கு ஆதரவாக செயல்பட்டு வாக்களித்தனர். அதே போன்று இம்முறை வரவு-செலவுத் திட்டத்திலும் அவர்கள் அப்படி நடந்துகொள்ளலாம் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இதனையடுத்தே இந்தக் கூட்டங்கள் நடக்கவுள்ளன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடக்கவுள்ளது.

அந்தக் கட்சியிலிருந்து விலகிய, முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெமீல் மீண்டும் கட்சியில் இணைவது குறித்து அன்று பேசப்படவுள்ளது. அதேபோல் பட்ஜெட்டை எதிர்த்து வாக்களிப்பதா அல்லது இறுதி வாக்கெடுப்பை தவிர்ப்பதா என்பது குறித்தும் பேசப்படவுள்ளது.

இதற்கிடையில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், நாளை சனிக்கிழமை கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்திக்கவுள்ளார். வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பது என்ற தலைமையின் முடிவை அவர் அன்றையதினம் விவரிக்கவுள்ளார் என்று அறியமுடிந்தது. (அ)

### தென்னிந்திய திருச்சபைக்கு புதிய பேராயரை தெரிவதற்கு முடிவு

மானிப்பாய்,நவ.19

வட்டு. - தென்னிந்திய திருச்சபை பேராலயத்திற்கு புதிய பேராயரை நியமிக்க சென்னையிலுள்ள செனட் சபை துரித நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளது.

தற்போதுள்ள தென்னிந்திய திருச்சபை பேராயரின் காலம் 2022 நவம்பர் 9 ஆம் திகதியுடன் முடிவடைய உள்ளது.

இதனையடுத்து புதிய பேராயரை நியமிப்பதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பில் சென்னையிலுள்ள செனட் சபை கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளது. (ஐ-5)

# போராட்டங்களினால் டொலர் கிடைக்காது!

## கூறுகின்றார் கம்மன்பில

கொழும்பு, நவ. 19

எதிர்ப்பு போராட்டங்கள் டொலர்களை ஈட்டுவதில்லை என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மீளத் திறக் கக் கோரி முன்னெடுக்கப் பட்டு வரும் போராட்டம் தொடர்பாக நேற்று ஊடகங் களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பைப் பாதுகாப்பதற் காகவே மசகு எண்ணெய் இறக் குமதியை இலங்கை நிறுத்தியது.

மசகு எண்ணெய் இறக்கு மதியை ஆரம்பித்து எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணி களை மீண்டும் தொடங்குவது அவசியம். எனினும், போராட் டங்கள் டொலர்களை ஈட்டித் தருவதில்லை என்ற கசப்பான



உண்மையை தொழில்சங்கங்கள் புரிந்து கொள்ளவில்லை.

தொழில்சங்கங்கள் தங்கள் நடவடிக்கைகளை முன்கூட் டியே சிந்திக்கவேண்டும். எரி சக்தி அமைச்சராக எனக்கும் டொலர் சம்பாதிக்கும் திறன் இல்லை.

நான் மசகு எண்ணெயை இறக்குமதி செய்வதாக இருந் தால், திறைசேரி எனக்கு டொலர்களை வழங்க வேண் டும். திறைசேரிக்கு டொலர் களை ஈட்டக்கூடிய வழி முறைகளை அமைச்சு தற்போது வகுத்து வருகிறது-என்றார்.(அ)

# கொரோனா தொற்று நிலைமை யாழ்.மாவட்டத்தில் உயர்கிறது

## ஒன்றுகூடுவதைத் தவிர்க்குமாறு கோருகின்றார் அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், நவ. 19

**யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்று நிலைமை அதிகரித்து செல்கிறது என தெரிவித்த யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதி பிள்ளை மகேசன், பயணங்கள் இதர செயல்பாடுகளின்போது ஒன்று கூடுவதை தவிர்க்கவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்தின் தற் போதைய நிலமைகள் தொடர் பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

யாழ்.மாவட்டத்தில் இற்றை வரை 469 மரணம் பதிவாகி யுள்ளன. தற்போதைய சூழலில் 634 குடும்பங்கள் கொரேனா தொற்றினால் தனிமைப்படுத் தப்பட்டுள்ளன. கடந்த மாதத் துடன் ஒப்பிடும்போது தற் போது கொரோனா அதிகரித்து



செல்கிறது. பொதுமக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் இருக்கவேண்டும். சமூக இடை வெளி, முகக்கவசம் அணிதல் போன்றவை கட்டாயம் பின் பற்றப்படவேண்டும்.

தற்போதைய சுழலில் தளர்வு நிலை அறிவிக்கப்பட் டுள்ளபோதும் சுகாதார அமைச்சு அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது. அதனை கட்டாயம் பின்பற்றவேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே யாழ்ப்பாணத்தில் கொரோனாவை முற்றுமுழுதாகக் கட்டுப்படுத்த லாம். முகக்க வசம், இடை வெளி போன்ற விடயங்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

இது மட்டுமன்றி பயணங் கள் இதர செயல்பாடுகளின் போது ஒன்று கூடுவதை தவிர்க்க வேண்டும்-என்றார். (அ-03)

# பாடசாலை மாணவர்களிடையே அதிகமாக பரவுகிறது கொரோனா

## சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 19

கல்வி நடவடிக்கைகளுக் காக பாடசாலைளை மீண்டும் திறந்த பின்னர் மாணவர்களி டையே அதிகமாக கொரோனா பரவி வருவதாக பொதுச் சுகா தார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஆங் கில ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அந்த தொழிற் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, பல மாணவர்கள், குறிப்பாக ஆசிரியர்கள் மற்றும் கல்வி ஊழியர்கள் கொரோனா வைரஸுக்கு சாதகமாக சோதனை செய்துள்ளனர்.

பல மாவட்டங்கள் உட்பட தென், மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள பெரும் பாலான பாடசாலைகளில் பல கொரோனா தொற்று பதிவாகி யுள்ளது. அவர்களில் பெரும் பாலானோர் தாங்கள் வைர ஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறியவில்லை.

இதுபோன்ற குடும்பங் களைச் சேர்ந்த குழந்தைகள் பாடசாலைக்குச் சென்ற பின் னர் மற்ற குழந்தைகளுக்கு வைரஸ் பரவக்கூடும்.

எனவே, பெற்றோர்களும் ஆசிரியர்களும் தமது பிள்ளை களை எப்போதும் முகமூடி அணியுமாறும், கைகளை அடிக் கடி கழுவி அல்லது சுத்தப்படுத் துமாறும் அறிவுறுத்தவேண்டும் -என்றார். (அ)

# பேஸ்புக், பதிவுக்காக கைதாகியவர் ரூ.10 மில்லியன் நட்டஈடு கோரி மனு!

கொழும்பு, நவ. 19

கோவிட் தொற்றால் உயிரி ழப்பவர்களின் உடல்களை தக னம் செய்வதை விமர்சித்தமைக் காக கைது செய்யப்பட்ட கணனி மென்பொருள் தயா ரிப்பாளர் ஒருவர், 10 மில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி உயர் நீதிமன் றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்துள்ளார்.

பிலியந்தலை, மடபாத பகுதியைச் சேர்ந்த சிரந்த ரன்மல் அமரசிங்க என்பவரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட் டுள்ளது. பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்ரமரத்ன உள்ளிட்ட ஏழு பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அவரது மனுவின்படி-

மனுதாரர் ஒரு தொழில் முறை மென்பொருள் தயாரிப் பாளர். அவர் சிலோன் மோட் டார் சைக்கிள் சங்கத்தின் தலை வராகவும் உள்ளார். தற்போது நாட்டில் ஜனாதிபதி ஆட்சி அமுலில் உள்ளது. பொதுமக் கள் மத்தியில் நிலவும் அதிருப்தி யால் ஜனாதிபதியை கடு மையாக விமர்சிக்கின்றனர்.

மனுதாரர் தொடர்ந்து அரசின் நடவடிக்கைகளை விமர்சித்து முகநூலில் பல் வேறு குறிப்புகளை வெளி யிட்டு வந்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் 17ஆம் திகதி மாலை 5.30 மணி யளவில் மனுதாரரின் வீட்டுக்கு சி. ஐ. டி அதிகாரிகள் குழு சென்றது. அவரது பேஸ்புக் பதிவுகள் குறித்து விசாரணை நடத்தியுள்ளனர்.

மனுதாரரின் முகநூலில் பதிவு செய்யப் பயன்படுத்தப் பட்ட கணனி உபகரணங்களு டன் மறுநாள் திணைக்களத் துக்குத் திரும்புமாறு மனு தாரரை அறிவுறுத்தியுள்ளனர்.

மனுதாரர் மறுநாள் சி.ஐ.டிக்கு சென்றபோது, தக னம் செய்வது தொடர்பான கோவிட் முகப்புத்தகத்தில் உள்ள குறிப்பை நீக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்.

மனுதாரர், ஒரு பக்தியுள்ள கத்தோலிக்கராக, கோவிட் தொற்றால் இறந்தவர்களின் தக னத்தை கடுமையாக விமர் சித்தார்.

பின்னர் மனுதாரர் கோவிட் விதிமுறைகளின் கீழ் கைது செய்யப்படுவார் என்று தெரி விக்கப்பட்டு கைது செய்யப் பட்டார்.

மனுதாரர் நவம்பர் 18, 2020 அன்று நீதிவான் முன் ஆஜர் படுத்தப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த ஆண்டு ஜனவரி 23ஆம் திகதி மனுதாரரின் தனிப்பட்ட மின்னஞ்சலுக்கு கொலை மிரட்டல் வந்தது. மனுதாரர் பொலிஸ்மா அதிப ரிடம் புகார் அளித்தார்.

தனது அடிப்படை உரிமை கள் மீறப்பட்டுள்ளதாக அறி விக்க, கணனி உபகரணங்களை மீள ஒப்படைக்குமாறு சி.ஐ. டிக்கு உத்தரவிட வேண்டும் என்றும், 10 மில்லியன் ரூபாய் நட்டஈடு கோரியும் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# தேவையான அதிகாரத்தை பெற்றும் அரசு மக்களின் பிரச்சனைகளை தீர்க்கவேயில்லை

## சுட்டிக்காட்டுகின்றார் கரு ஜயசூரிய

கொழும்பு, நவ. 19

அரசாங்கம் தேவையான அதிகாரத்தைப் பெற்றும் மக்க ளின் பிரச்னைகளுக்கு தீர்வு காணவில்லை என நீதியான சமூகத்துக்கான தேசிய இயக் கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்த ஊட கங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், தற்போதைய அரசாங் கத்தின் நிர்வாகத்தில் ஏற்பட் டுள்ள குளறுபடிகளால் அத்தி யாவசியப் பொருட்களின் விலைகள் விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளன. இத னால் மக்கள் மன உளைச்ச லுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதன் காரணமாக மக்கள் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வரிசையில் நின்று பல மணிநேரங்களை வீணடித்து வருகின்றனர்.



20ஆவது திருத்தச் சட்டத் தின் மூலமும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையின் மூலமும் அரசாங்கம் தங்களுக்குத் தேவையான அதிகாரத்தைப் பெற்ற போதிலும், அவர்களால் இந்தப் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியவில்லை.

உர விவகாரத்தில் அரசு என்ன செய்கிறது? என கேள்வி யெழுப்பிய அவர், இதற்கான இழப்பீடு குறித்து வரவு செல வுத் திட்டத்தில் குறிப்பிடப் படவில்லை-என்றார். (அ)

# இரண்டு ஆண்டுகளில் அரசாங்கம் பெரும் வெற்றிகளை பெற்றுள்ளது!

## கூறுகின்றது பொதுஜன பெரமுன

கொழும்பு, நவ. 19

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களில் கோவிட்-19 தொற்றுநோய்க்கு மத்தியிலும் பல வெற்றிகளைப் பெற்றுள் ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு வருடங் களாக அரசாங்கம் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை வகுத்திருந்ததாகவும், எனினும் உலகளாவிய தொற்றுநோய் காரணமாக அந்தத் திட்டங்கள் தடைப்பட்டுள்ளதாக பொது ஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவாசம் கூறினார்.

வெளிநாட்டு நிறுவனங்க ளால் ஒக்ரோபர் மாத இறு தியில் கணிக்கப்பட்ட அளவு களுக்கு மாறாக, பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது, குறைந்தபட்ச அளவில் கோவிட் இறப்புகளை வைத்திருக்க அரசாங்கம் நிர்வ கிக்கிறது என்றும் அவர் குறிப் பிட்டார்.



# வெள்ளப் பெருக்கும் தொடரும் பேரழிவுகளும்

அண்மையில் வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக இலங்கையில் சில நாட்கள் தொடர்ந்த அடைமழை காரணமாக ஆறுகள் பெருக்கெடுத்தமை, குளங்கள் நிரம்பி வழிந்தமை என்பனவற்றையடுத்து நாட்டின் பல பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. பல இடங்களில் மண் சரிவுகள், கட்டடங்கள், இடிந்து விழுந்தமை, மரங்கள் முறிந்து விழுந்தமை என்பவற்றால் உயிரிழப்புகளும் ஏற்பட்டிருந்தன. 25 பேர் உயிரிழந்ததாகவும் பலர் காணாமற் போனதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

பெரும் ஆறுகள் இல்லாத குளம் நிரம்பி வழியாத வடபகுதியிலும் உயிரிழப்புகளும், இடப் பெயர்வுகளும் இடம் பெற்றுள்ளன என்பதையும் கவனத்தில் எடுக்காமல் விடமுடியாது.

முன்பெல்லாம் இலங்கையில் மண் சரிவு என்பது பல வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் அனர்த்தமாகவே பார்க்கப்பட்டது. ஆனால் தற்சமயம் மழை வந்தாலே மண் சரிவு என்றளவுக்கு மண் சரிவும் உயிரிழப்புகளும் அடிக்கடி ஏற்படும் ஆபத்துகளாகி விட்டன. இப்படியான அனர்த்தங்கள் மூலம் மலையக மக்களே கூடுதலாகப் பாதிக்கப்படும் நிலை நிலவி வருகிறது. வருடா வருடம் இப்படியான பேரழிவுகள் இடம்பெற்றபோதும், எவ்வாறு அடிக்கடி மலையக மக்கள்மீது இடம்பெறும் குளவிக் கொட்டுக்கும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கும் தீர்வு காணப்படவில்லையோ, அவ்வாறே இம் மண் சரிவுகளுக்கு எதிரான மாற்று நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவுமில்லை, எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவுமில்லை. மாறாக மேலும் அதிகரிக்கக்கூடிய நடவடிக்கைகளே அபிவிருத்தியின் பெயராலும், ஆக்கிரமிப்பின் பேராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக தங்குமிடங்கள், உணவுப் பொதிகள், உலர் உணவுகள், நிவாரணங்கள் வழங்குவதுடன் அரச தரப்பு தன் கடமைகளை முடித்துக் கொள்கிறது.

ஒவ்வொரு வருடமும் அனர்த்தங்கள் ஏற்படும்போது அவை அடுத்த வருடமும் இடம்பெறும் என்பது சகலருமே அறிந்த விடயமாகும். அப்படியானால் ஏற்பட்ட அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டு அடுத்த வருடமோ அல்லது அடுத்தடுத்த வருடங்களிலோ தடுத்து நிறுத்த ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது விடை காணப்படாத கேள்வியாகவே உள்ளது.

சீனாவுடன் நெருக்கமான உறவைப் பேணி வரும் தற்போதைய அரசாங்கம் சீனாவின் ஒரு கட்சி ஆட்சி என்பதற்கு ஒப்பாக ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கொள்கையைப் பின்பற்றுவது, நிர்வாகங்களில் இராணுவ மேலாண்மையை அதிகரித்தல் போன்ற விடயங்களில் பின்பற்றி வருகிறது. அதே போன்று வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்துவது, தன்னிறைவுப் பொருளாதாரம் என்பதில் ஏன் பின்பற்றவில்லை என்பது கேள்வியாக விழுகிறது. அரச சர்வாதிகாரப் பாணியிலான விடயங்களைப் பின்பற்றும் இலங்கை தேசிய நலன்கள் சார்ந்த விடயங்களில் பின்பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

> **“ ஒவ்வொரு வருடமும் அனர்த்தங்கள் ஏற்படும்போது அவை அடுத்த வருடமும் இடம்பெறும் என்பது சகலருமே அறிந்த விடயமாகும். அப்படியானால் ஏற்பட்ட அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டு அடுத்த வருடமோ அல்லது அடுத்தடுத்த வருடங்களிலோ தடுத்து நிறுத்த ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது விடை காணப்படாத கேள்வியாகவே உள்ளது.**

சீனா ஒரு காலத்தில் உலகிலேயே மிகமிக வறிய நாடுகளில் ஒன்றாகவும் விளங்கியதுடன் பஞ்சம், வறுமை, வெள்ளம், வரட்சி போன்ற அனர்த்தங்களால் வருடாவருடம் இலட்சக் கணக்கான மக்கள் உயிரிழந்தும் வந்தனர். யாங்ஷி நதி, மஞ்சள் நதி என்பவற்றால் ஏற்படும் வெள்ளப் பெருக்குகளால் வருடாவருடம் பல இலட்சம் மக்கள் உயிரிழந்து வந்தனர்.

நா.யோகேந்திரநாதன்

இந்த நிலையில் யங்ஷி நதியைக் கட்டுப்படுத்த 5 இலட்சம் மக்கள் சம்பளமின்றி உணவுக்கும், உடைக்கும் மட்டும் ஊதியம் பெற்று களத்தில் இறங்கினர். யாங்ஷி நதியில் வெள்ளப் பெருக்குக்கு அணைகட்டிக் கட்டுப்படுத்தப்பட்டதுடன் பல இலட்சம் தரிசு நிலங்கள் விளை நிலங்களாக்கப்பட்டன. சீனாவின் பெரும் பகுதி மின்சார மயப்படுத்தப்பட்டது.

இன்று சீனா வல்லரசுகளுடன் போட்டியிடுமளவுக்கு பொருளாதார, இராணுவ வலிமையில் உயர்ந்து நிற்கிறது.

அவ்வாறானால் இலங்கையில் வெள்ளப் பெருக்குகளைக் கட்டுப்படுத்த மக்கள் களமிறங்குவார்களா?

சீனாவில் சாதாரண விவசாயிகள், அரச அதிகாரிகள், கம்யூனிஸ்ட் கட்சியினர், இராணுவத்தினர் என அனைவருமே தேசப்பற்றுடன் அர்ப்பணிப்புடன் பணியில் இறங்கினர். ஊழல், மோசடி, விரயம், துஷ்பிரயோகம் என்பன தவிர்க்கப்பட்டு மக்களின் அர்ப்பணிப்பு நாட்டுக்கே பயன்பட்டது.

ஆனால் இங்கு ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம் என்பன காரணமாகப் பல அரச உயர் அதிகாரிகள் பதவி விலகுமளவுக்கு அதிகரித்துள்ளன. உணவுக்கும் உடைக்கும் வேலை செய்வது கூட தற்சமயம் ஏற்பட்ட விலைவாசி உயர்வினால் சாத்தியமற்றுப் போய்விட்டது. மக்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றினாலும் அவற்றின் பலன்களைப் பெரும் வர்த்தக முதலைகளும் இறக்குமதியாளர்களும் சுருட்டிக் கொள்ளும் நிலையே நிலவுகிறது.

எனவே எமது நாட்டில் பெரும் மக்கள் இயக்கம் மூலம் இயற்கை அனர்த்தங்களைக் கட்டுப்படுத்துவது என்பது நினைத்துக் கூடப் பார்க்கமுடியாத விடயமாகும்.

அதேவேளையில் அபிவிருத்தியின் பேராலும் வேறு சில காரணங்களுக்காகவும் மேற்கொண்ட பல திட்டங்களும் இன்றைய வெள்ளப் பெருக்கு, மண் சரிவு என்பவற்றுக்குக் காரணங்கள் என்பதையும் மறுத்துவிடமுடியாது.

திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க ஆட்சியின்போது தேசிய மயமாக்கப்பட்ட மலையகத் தோட்டங்கள், ஜே. ஆர். ஆட்சியில் மீண்டும் தனியாருக்கு வழங்கப்பட்டன. அந்த தனியார் தோட்டங்களிலுள்ள பெரு மரங்களை வெட்டி விற்பனை செய்து விட்டனர். இதனால் ஏற்படும் மண்ணரிப்பு மண்ணை இழக்கச் செய்து மண்ணரிப்புக்கு வழி கோலுகிறது. வெள்ளம் வழிந்தோடும் பாறைகளுக்குக் குறுக்காக நெடுஞ்சாலைகளும் கட்டிடங்களும் அமைக்கப்படுகின்றன. அதன் காரணமாக வெள்ள நீர் தேங்கி வெள்ளப் பெருக்கு ஏற்படவும் மண் சரிவு ஏற்படவும் வழியமைக்கப்படுகின்றன.

வடக்கில்கூட ஒவ்வொரு கோவிலில் ஒரு கேணியும் ஒரு குளமும் அமைக்கப்பட்டிருக்கும். அதுமட்டுமின்றி வயல் வெளிகளின் நடுவிலும் ஊரில் பல முக்கிய இடங்களிலும் குளங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இவை வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்துவதுடன் நிலக் கீழ் நீரையும் பாதுகாப்பவையாக இருந்தன. ஆனால் தற்சமயம் குளங்கள் மூடப்பட்டு கட்டிடங்கள் அமைக்கப்பட்ட நிலையில் வெள்ளப் பெருக்கு தவிர்க்கப்பட முடியாததாகிறது.



எனவே, சகல மட்டங்களிலும் சகல கட்டமைப்புகளிலும் உரிய மாற்றங்களைக் கொண்டு வராமல் வெள்ளப் பெருக்குகளையோ, மண் சரிவுகளையோ தடுத்து நிறுத்திவிட முடியாது.

- நன்றி: அருவி ■

ஈழநாடு








# தமிழ் கட்சிகள் எந்தளவுக்கு பொறுப்புடன் செயல்படுகின்றன?

வரலாறு என்பது நாம் கடந்து வந்த பாதையில் விட்ட தவறுகளைச் சீர்செய்துகொள்ளவும், தொடர்ந்து தவறுகள் செய்யாமலிருக்கவும் வழிகாட்டும் பாடமாகும் இந்த வகையிலே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல உள்ளன. அதிலும் குறிப்பாக சமூகம் சார்ந்த சமூகத்தின் உரிமையை, இருப்பை, பெருமையை நிலைநாட்டும் அரசியல் வரலாற்றுப் பாடத்தை நாம் கற்று நன்கு புரிந்து கொண்டு செயல்படுவது அவசியமாகும்.

நலிந்த நிலையிலுள்ள நம்மினத்தின், நம் நாட்டின் சீரமைப்புக்கு நமது சிந்தனையில் மாற்றம் ஏற்பட வேண்டும். தவறுகள் கண்டறியப்பட்டு திருத்தப்பட வேண்டும். அதுவே நாகரிகமும் கூட. வர லாற்றிலிருந்து கற்ற பாடங்களில் விட்ட தவறுகளை இனங்கண்டு திருத்தி உரிய வழியில் பயணிப்பதே அறிவுப்பூர்வமானது, ஆக்கப்பூர்வமானது. இந்நிலை யிலே தமிழ் மக்கள் வளமான, நிம்மதி யான வாழ்வுக்கு தமிழ் மக்கள் மத்தி யிலே பல்கிப் பெருகியுள்ள அரசியல் தொழில்சங்க மற்றும் சமூக அமைப்புக்களின் பங்கு முக்கியமானது.

நம்மை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் இந்த நாட்டின் குடிமக்கள் என்ற ரீதியில் பெற்றுக்கொள்ள வேண்டிய உரிமைகள் எவை என்பதையும், எமக்கு மறுக்கப்பட்டுள்ள உரிமைகள் எவை என்பதையும் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் உண்டென்று தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல், தொழில்சங்க, சமய, சமூக அமைப்புக்கள் யாவும் ஏற்றுக்கொண்டுள்ளன. அவ்வாறு கூறியும் வருகின்றன. ஆனால், அவை எவை? அவற்றைத் தீர்த்துக்கொள்ளக் கூடிய வழிமுறைகள் எவை என்பதை மட்டும் எவரும் கூறுவதுமில்லை. அவற்றைப் பெரிதுபடுத்துவதுமில்லை. இவை தம்மத்தியிலே பல்வேறு வகையான போட்டிகளில் ஈடுபட்டு சமுதாயத் தேவைகளை இரண்டாமிடத்திற்கு தள்ளிவிடுவதையே செய்கின்றன. சமுதாயப் பிளவுகளால் உரிமைக் கோரிக்கை மழுங்கடிக்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், தேவைகள் சரியான முறையில் தெளிவாக இனங்காணப்பட்டுள்ளனவா என்றால் அதற்கான பதிலை உறுதியாகக் கூறும் ஆற்றல் சமூக வழிகாட்டிகளென்றும், நம்மிடையே வலம் வருபவர்கள், வாக்கு கேட்பவர்கள் எவரிடமும் இல்லை.

தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்க, மீட்கவென்று திடீர் திடீரென்று பல்வேறு அரசியல் மற்றும் அமைப்புகள் தோன்றி வருகின்றன. வீரவசனம் பேசுகின்றன. அறிக்கைகள் விடுகின்றன. ஏற்கனவே இருப்பவர்களுக்கு சமூகத் தேவைகள் தொடர்பான அறிவோ, பிரச்னைகளைத் தீர்த்துவைக்கும் ஆற்றலோ இல்லையா என்ற வினா சிந்திக்கும் ஆற்றல் கொண்ட சீர்தூக்கும் அறிவுக்கொண்ட ஒவ்வொருவர் மத்தியிலும் இயல்பாக ஏற்பட வேண்டும்.

இலங்கையில் ஏனைய சமூகங்களோடு ஒப்பிடும் போது அரசியலிலாகட்டும், தொழில்சங்க ரீதியிலாகட்டும் பல்கிப் பெருகிய அரசியல் கட்சிகளையும், தொழில்சங்கங்களையும் கொண்ட சமூகமாகத் தமிழ் சமூகம் விளங்குகின்றது. நம் மத்தியிலே புதிய புதிய அரசியல், தொழில்சங்க அமைப்புக்கள் முளைவிடுவதால் சமுதாய நலன் பலமடையுமா, பாதிக்கப்படுமா என்பது தொடர்பில் அவதானிக்க வேண்டும். அரசியல்வாதிகளே சமூகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கின்றார்களேயன்றி சமூகத்திலுள்ள புத்திஜீவிகளோ, ஆய்வாளர்களோ, தனவந்தர்களோ, சமயப் பிரமுகர்களோ, சமூக சேவையாளர்களோ, வேறு எவருமோ அல்ல. ஒரு நாட்டின், சமூகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஆற்றல் கொண்ட அரசியல் புனிதமாக இருத்தல் வேண்டும். புனிதப்பட வேண்டும். புனிதப்படுத்தப்பட வேண்டும்.

முன்னாளில் நாட்டின் அரசாட்சியைக் கொண்டு நடத்திய மன்னர்களை இறைவனுக்கு அடுத்து வைத்துப் போற்றிய மரபின் உரிமையாளர்கள் நாம். நீதி நெறி தவறாது, சுய லாபம் நோக்காது மக்கள் பணியே மகேசன் பணி அதாவது இறைபணியென்று வாழ்ந்து அரசாட்சி செய்த இனம் தமிழினம். நமது இந்து சமய புராண இதிகாசங்களிலும் அரசாட்சியின் சிறப்பு, ஆளும் முறைமை என்பன தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. தமிழர் வரலாற்றிலும், இந்து சமய வரலாற்றிலும் தர்மநெறி தவறா அரசாட்சியின் மாண்பு உலகக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. எப்படியும் ஆளலாம் என்றில்லாமல் இப்படித்தான் ஆளவேண்டும் என்ற வரைவிலக்கணத்தை உலகிற்கு வழங்கிய பரம்பரையினர் நாம்.

இவற்றை மனதில் கொண்டு நம்மவர்கள் அரசியல் நடத்துவது, ஆள முனைவது பொருத்தமானது. பொறுப்பனதும் கூட. அன்று அரச பரம்பரை அற்று விட்ட நிலையில் பட்டத்து யானை ஆளத் தகுதியானவரைத் தேடிவந்து மாலையிட்டு அரச கட்டிலிலேற்றும் வரலாறாயுள்ளது.

இன்று ஜனநாயக நாட்டில் எல்லோரும் மன்னர்கள் என்றாகிவிட்ட நிலையில் எல்லோருமே அரசாளத் தகுதி கொண்ட வர்களாகக் கொள்ளப்படுகின்றனர். தம்மை தாமே மன்னர்களென்று மக்கள் முன்வருகின்றனர். அன்று யானை மாலைப் போட்டு தகுதியானவரைத் தெரிவு செய்தது போலன்றி மக்கள் தாம் நினைத்தவர்களைத் தெரிவு செய்வது ஜனநாயகம் என்று கூறப்படுகின்றது. அன்றைய முடியாட்சி இன்றையது மக்களாட்சி.

நாட்டின் அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மொழியுரிமையை உரிய படி நடைமுறைப்படுத்தும்படி எவருமே அதிகார பீடத்துடன் தொடர்புகொள்ளவில்லை. கோரிக்கை வைத்ததாகவும் தெரியவில்லை. உண்மை நிலை இது வாகவேயுள்ளது. இது நம்மினம் செய்த பாவம். சாபக்கேடு அல்லவா? வேறு எப்படி எமது ஆதங்கத்தை வெளிப்படுத்துவது?

சர்வதேச மட்டத்தில் போட்டியிடக் கூடியதாக இலங்கையின் கல்வி வளர்ச்சி கண்டு வருகின்றது. நமது நிலையோ பரிதாபத்திற்குரியதாயுள்ளது. தமிழ்க் கல்வி தமிழர் கல்வி தொடர்பாக நமது அரசியல் தலைவர்கள் எவராவது அண்மைக் காலத்தில் காத்திரமாகக் குரல் கொடுத்ததாயில்லை. கொடுப்பார்கள் என்று நம்பக்கூடியதாயும் எதுவும் தோன்றவில்லை. தமிழ்மொழி மூலம் கல்வி குறிப்பாகத் தமிழர் கல்வி தேசிய ரீதியில் ஒப்பிடும்போது மிகவும் பின்தங்கியேயுள்ளது. கல்வி நிலை தொடர்பில் கவனம் செலுத்தாதவர்கள் எவ்வாறு சமூகத் தலைவர்கள் என்ற பட்டியலில் இடம்பெற முடியும்?

**த.மனோகரன்**

தேசிய ரீதியில் அரசத் துறையில் தமிழர்களுக்கு உரிய தொழில் வாய்ப்புகள் கிட்டுவதில்லை. இதே போன்று வங்கிகள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்றவற்றின் நிலைமையுள்ளது. சிற்றூழியர் நியமனங்கள்கூட உரியபடி கிட்டுவதில்லை என்பதற்குத் தமிழ் பாடசாலைகளுக்கான சிற்றூழியர்களாக வேற்று இனத்தவரே நியமிக்கப்பட்டு வருவது சான்றாகவுள்ளது.

பெருந்தோட்ட அலுவலகங்களில் கூட தமிழர்களுக்கு மாதாந்த சம்பளம் பெறும் பதவிகள் கிட்டுவதில்லை. வெளியாருக்கே நியமனங்கள் வழங்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் பெருந்தோட்ட துறைசார் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல், தொழிற்சங்கத்தினர் கவனம் செலுத்தவில்லை. தொழில் வாய்ப்பை இழந்த நிலை அதாவது புறக்கணிப்புக்குள்ளாகும் நிலை தமிழர்களுக்குள்ளது என்பது நம்மவர்களுக்குப் புலப்படுவதாகவும் தெரியவில்லை.

நாட்டின் எங்கோ ஒரு மூலையிலாவது ஏதாவது இனவெறிப் பயங்கரவாதத்தால் தமிழர்கள் பாதிக்கப்படுவது வழக்கமாயுள்ளது. இது தொடர்பில் கவனம் செலுத்தி உரியவர்களுடன் தொடர்புகொண்டு இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்த உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதா? அறிக்கை விடுவதுடன் அடங்கிவிட்டால் துன்பங்கள் தீருமா?

இதேபோல் அடிப்படை உரிமைகள், தேவைகள் பல நிறைவேற்றப்படவிருந்தும் அவற்றை புறந்தள்ளித் தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதைப்பதும், வாக்குகளை கூறுபோட்டு அரசியல் ரீதியில் சக்தியிழக்கச் செய்வதுமே நம்மவர்களின் அரசியல் விளையாட்டாக உள்ளமையைப் புத்தியுள்ளவர்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும்.

தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை. தன் அரசியல் எதிரிக்கு அதாவது தன் அரசியல் போட்டியாளரான தன் சமூகத்தவன் அரசியல் அதிகாரத்தைப் பெறக்கூடாது, இழக்க வேண்டும், அழிய வேண்டும் என்ற போக்கும்,

> **தமிழ் மக்கள் எதிர் நோக்கியுள்ள பிரச்னைகள், தேவைகள் சரியான முறையில் தெளிவாக இனங்காணப்பட்டுள்ளனவா என்றால் அதற்கான பதிலை உறுதியாகக் கூறும் ஆற்றல் சமூக வழிகாட்டிகளென்றும், நம்மிடையே வலம் வருபவர்கள், வாக்கு கேட்பவர்கள் எவரிடமும் இல்லை.**

நோக்கும் மேலோங்கிய நிலையில் நமது தமிழ்ச் சமூகம் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. இது நடைமுறையில் காணப்படும் யதார்த்தம், உண்மை நிலை.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் நமது அரசியல்வாதிகள் சிந்திக்க வேண்டும். தமது செயற்பாடுகளால் சமூகத்தின் ஒற்றுமை பேணப்படுகின்றதா? மேன்மைப்படுத்தப்படுகின்றதா? அல்லது காவு கொடுக்கப்படுகின்றதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ் மக்கள் இந்நாட்டின் சிறுபான்மையினத்தவர்கள். நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றும் சக்தியற்றவர்கள். அதனால், தமக்குரிய உரிமைகளைத் தெரிந்துகொள்வதற்கும், பெற்றுக்கொள்வதற்கும், பாதுகாத்துக்கொள்வதற்கும் சமூக ஒற்றுமை அவசியமானது. அதை அரசியல் செய்வோர் கெடுத்துவிடக் கூடாது.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற பழமொழியும், பஞ்ச தந்திரக் கதைகளிலொன்றாகிய சிங்கமும் எருமைகளும் என்ற கதையும் நமக்கு வழிகாட்டுபவையாக, சிந்தனையைத் தூண்டுபவையாக இருத்தல் வேண்டும். அவை நமக்கு புத்திக்கட்டும் தத்துவங்களாய் அமைந்துள்ளன.

நம் மத்தியிலே நிலவும் போட்டி அரசியல், தொழிற்சங்க விளையாட்டுக்கள், பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம் என்பதுபோல் எலியின் நிலைக்கு நம்மைத் தள்ளி வேடிக்கைப் பார்க்க வைத்துள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதும் நம் மத்தியிலே பல காலம் வழங்கிவரும் அறிவுத் தரும் கூற்று. தமிழர்கள் கூறுபட்டால் தமிழர்கள் பயன்பெறுவார்களா? பயனை இழப்பார்களா? சிந்திக்க வேண்டியது நம்மவர் பொறுப்பு. சிந்திக்க மறுத்தால், மறந்தால் வேதனையைக் கட்டி அணைக்க வேண்டி வருவதும், தவிர்க்க முடியாததாகும். இதை எவராலும் தடுக்க முடியாது.


உரிமைக்கு இணைந்து குரல் கொடுப்போம். உறவுக்கு துணிந்து கைகொடுப்போம். சமுதாய நலன் கருதிப் பேதங்களை மறப்போம். ஒன்றுபட்டுச் செயல்படுவோம் என்ற அரசியல் பக்குவம், தன்னலம் கடந்த நாகரிக சிந்தனை நம் மத்தியிலே, நம்மவர் மத்தியிலே வலுப்பெற வேண்டும். அப்போதுதான் நமக்கு மீட்சி. ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம் 15 நிமிடம்

**21.** வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

| வடிவம் | பெயர் | விளிம்புகளின் எண்ணிக்கை | முகங்களின் எண்ணிக்கை | உச்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
|  | .................... | .................... | .................... | .................... |

**22.** பாடசாலை ஒன்றில் 30 பிள்ளைகள் வீதம் இருக்கக் கூடிய ஆறு வகுப்பறைகளும், 35 பிள்ளைகள் வீதம் இருக்கக் கூடிய நான்கு வகுப்பறைகளும் இருந்தன. எனின் பத்து வகுப்பறைகளிலும் இருக்கக் கூடிய பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................................................


**23.** என்னிடமுள்ள பென்சிலின் நீளம் 13cm 5mm ஆகும். தம்பியிடம் இருந்த பென்சிலின் நீளம் எனது பென்சிலின் நீளத்திலும் 4cm 7mm குறைவானது.

(i) தம்பியிடமிருந்த பென்சிலின் நீளம் யாது? ....................cm ..........................mm

(ii) என்னிடமும் தம்பியிடமும் இருந்த பென்சில்களின் மொத்த நீளம் யாது?

....................cm ..........................mm

**24.** P, Q, R, S, T, U சில நகரங்கள் அமைந்துள்ள விதம் தரப்பட்டுள்ளது.




(i) Q நகரமானது S நகரத்திற்கு எத்திசையில் உள்ளது?

..............................................

(ii) நகரம் P ஆனது T யிற்கு .............................................. திசையிலும் .................... இற்கு வடமேற்குத் திசையிலும் காணப்படுகின்றது.

**25.** முற்பகல் 6.00 இற்கு நுவரெலியாவிலிருந்து புறப்பட்ட பேருந்து 3 மணித்தியாலம் 45 நிமிடங்களில் கண்டியை அடைந்தது. அங்கு 30 நிமிடங்கள் தாமதித்த பின் 2 மணித்தியாலம் 40 நிமிடங்களின் பின் கொழும்பை அடைந்தது. பேருந்து கொழும்பை அடைந்த நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்திற்கேற்ப எழுதுக.

..............................................................

**26.** 620 தோடம்பழங்களில் 80 ஐ மீதப்படுத்தி வைத்து ஏனையவற்றை ஆறு பெட்டிகளில் சமமாக அடுக்கினால் ஒரு பெட்டியில் உள்ள தோடம்பழங்கள் எத்தனை?

..............................................................


**27.** ஒரு தேயிலைத்தோட்டத்தில் முதல் நாளில் 39kg 900g தேயிலைக் கொழுந்தும் இரண்டாம் நாளில் 55kg 850 g தேயிலைக் கொழுந்தும் பறிக்கப்பட்டது. இரு நாட்களும் பறிக்கப்பட்ட தேயிலைக் கொழுந்தின் மொத்த நிறை யாது?

..............................................................

**28.** 150g பருப்பின் விலை ரூபாய் 36.00 ஆகும். எனின் 1kg பருப்பு வாங்குவதற்குத் தேவையான பணம் யாது?

..............................................................

**29.** தரம் 5 வகுப்பில் உள்ள மாணவர்கள் விரும்பும் நிறங்கள் தொடர்பான விபரம் வரைபில் தரப்பட்டுள்ளது.







(i) பச்சை நிறத்தை விரும்புவோரின் எண்ணிக்கை சிவப்பு நிறத்தை விரும்புவோரின் எண்ணிக்கையின் அரைவாசியாகும். அதனை நிழற்றிக் காட்டுக.

(ii) தரம் ஐந்து வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..............................................................

● **30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30.** சூரிய நமஸ்காரப் படிமுறையில் 3ஆம், 4ஆம், 5ஆம் படிமுறையாக அமைவது

(1) 
(2) 
(3) 

**31.** நான் சுவாசிக்கும் ஒலியையும் நன்றாகச் செவிமடுக்கின்றேன். எனக்கு இப்போது எனது இதயத்தின் ஒலி மட்டுமே கேட்கிறது. ஆம் எனது உள்ளம் அமைதியடைந்துள்ளது. எனது உடலும் உள்ளமும் அமைதியடைந்துள்ளன. இக் கூற்று

(1) உள்ளத்தைத் தளர்த்துதல் (2) பிரார்த்தனை (3) உடலைத் தளர்த்துதல்

**32.** ஆணிவேர் காணப்படும் தாவரத் தொகுதி எது?

(1) பனை, தென்னை, கமுகு, நெல்

(2) பலா, வேம்பு, கொய்யா, முதிரை

(3) இலுப்பை, கமுகு, கித்துள், கடைச்சி

**33.** இலுப்பை, கொன்றை ஆகியவை பூக்கும் மாதம்

(1) பங்குனி மாதம் (2) ஆவணி மாதம் (3) கார்த்திகை மாதம்

**34.** பின்வரும் பண்புகளைக் கொண்ட வித்து பரவலடையும் முறை யாது?


- கொழுக்கி போன்ற அமைப்பைக் கொண்டிருக்கும்.
- ஒட்டும் தன்மை காணப்படும்.
- சுவையான சதைப்பகுதியைக் கொண்டிருக்கும்.

(1) நீரினால் பரவலடைகின்றது.

(2) காற்றினால் பரவலடைகின்றது.

(3) விலங்கினால் பரவலடைகின்றது.

# மாணவர்களுக்கு தொற்று 4 பாடசாலைகளுக்கு பூட்டு



## பதுளை மாவட்டத்தில் இந்த நிலைமை

பதுளை, நவ. 19

**பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்லை கல்விப் பிரிவைச் சேர்ந்த நான்கு பாடசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஒரு பாடசாலை முழுமையாக மூடப்பட்டுள்ளதுடன், ஏனைய மூன்று பாடசாலைகளில் குறிப்பிட்ட வகுப்புக்களைக் கொண்ட கட்டடத் தொகுதிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என்று ஹல்துமுல்லை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அசங்க சம்பத் தெரிவித்தார்.**

கொஸ்கம வித்தியாலயத்தில் அதிபர், ஆசிரியர்கள் மூவருக்குக் கொரோனாத் தொற்று உறுதியானதால், அந்த வித்தியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அத்துடன் சொரகுன மகா வித்தியாலயத்தில் தரம் 1, தரம் 2, தரம் 11 ஆகிய வகுப்புகளைக் கொண்ட கட்டடத் தொகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அமிலகம மகா வித்தியாலயத்தில் தரம் 5 வகுப்புகளைக் கொண்ட கட்டடத் தொகுதியும் மூடப்பட்டுள்ளது.

அடுத்து இலுக்பெலெஸ்ஸ மகா வித்தியாலயத்தின் தரம் 3 வகுப்புகளைக் கொண்ட கட்டடத் தொகுதியும் மூடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நான்கு வித்தியாலயங்களின் வகுப்புக்கள் உள்ள கட்டடத் தொகுதிகளுக்குக் கிருமிநாசினி தெளித்து சுத்தப்படுத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதிபர், ஆசிரியர்கள் மூவர் மற்றும் நான்கு மாணவர்கள் ஆகியோருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என அவர்களிடம் மேற்கொண்ட 'ரெபிட் அன்டிஜன்' பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதுடன், தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணியவர்களை அடையாளம் கண்டு, அவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், லுணுகலையில் மூன்று சிறுபிள்ளைகள் உள்ளிட்ட 13 பேர் கொரோனாத் தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர். 12 மாத ஆண் குழந்தை மற்றும் 3, 4 ஆகிய வயது களைக் கொண்டவர்களுக்கே தொற்று உறுதியாகியுள்ளது.

லுணுகலை பொதுச் சுகாதாரப் பணியகத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட 'ரெபிட் அன்டிஜன்' பரிசோதனையின் போதே, மூன்று சிறு பிள்ளைகள் உள்ளிட்டு 13 பேர், தொற்றுக்குள்ளாகியமை தெரியவந்துள்ளது என லுணுகலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். (இ)

# விடுதி முற்றுகை; அறுவர் சிக்கினர்

கொழும்பு, நவ. 19

கொழும்பு, கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானை பிரதேசத்தில் விபச்சார விடுதி ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளதுடன் அறுவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கல்கிசை பொலிஸார், கல்கிசை நீதிவானிடம் பெற்றுக்கொண்ட விசேட சோதனை உத்தரவுக்கு அமைவாக இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த விடுதியை நடத்திச் சென்ற நபரும் விபச்சார விடுதியை நடத்திச் செல்வதற்கு உடந்தையாக இருந்த ஐந்து பெண்களுமே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எட்டியாந்தோட்டை, பொரலாந்தை, மொறட்டுவை, இரத்மலானை, பொல்கஸ் ஓவிட்ட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)



# ஜனாதிபதியுடன் நியாயமான கலந்துரையாடலுக்கு முன்வரவேண்டும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

## அமைச்சர் டக்ளஸ் அழைப்பு

கொழும்பு, நவ. 19

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் என்னைச் சந்தித்து, என்னிடம் வெளிப்படுத்தியுள்ள எதிர்பார்ப்புகளை ஜனாதிபதியிடமும் வெளிப்படுத்தி, நியாயமான கலந்துரையாடலுக்கு முன்வர வேண்டும் என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைப்பு விடுத்தார்.

பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான நான்காம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு வேண்டுகோள் அவர் மேலும் கூறுகையில்,

"அரசு, காணாமல் ஆக்கப்பட்டோர்தொடர்பில் பரிகாரம் காண்பதற்கான ஒரு மனிதாபிமான செயலாக 300 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பில் தற்போது பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டாலும், இப்பிரச்னை தொடர்பில் அரசு தனது அவதானத்தைச் செலுத்தி இருப்பது வரவேற்கத்தக்கது.

உறவுகள், தோழர்கள், என்னோடு பழகியவர்கள் காணாமல்போனதன் வலியை நான் உளமார உணர்ந்தவன் என்ற வகையில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது, உறவினர்களது உணர்வுகளையும் நான் அறிவேன்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் என்னைச் சந்தித்து, என்னிடம் வெளிப்படுத்தியுள்ள எதிர்பார்ப்புகளை ஜனாதிபதியிடமும் வெளிப்படுத்தி நியாயமான கலந்துரையாடலுக்கு முன்வர வேண்டும் என இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன்" - என்றார். (இ)

# சடுதியாக அதிகரித்தது கோழி இறைச்சி விலை

கொழும்பு, நவ. 19

கொழும்பின் சில பகுதிகளில் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி 830 ரூபாய்வுக்கு விற்கப்படுகின்றது.



2 கிலோகிராம் கோழி இறைச்சியைக் கொள்வனவு செய்வதற்கான பணத்தில் தற்போது ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியை மாத்திரமே கொள்வனவு செய்ய முடிகின்றது எனவும், கோழி இறைச்சிக்கு நிர்ணய விலை அறிவிக்கப்பட வேண்டும் எனவும் நுகர்வோர் கூறுகின்றனர். (இ)

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மரணித்து விட்டார்களா? தமிழினம் சலுகைகளுக்கு ஒருபோதும் சோரம்போகாது

## பாராளுமன்றில் கலையரசன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, நவ. 19

2009ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 700 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. தவராசா கலையரசன், மரணச் சான்றிதழ் வழங்குவேன் என இந்த நாட்டின் ஜனாதிபதி கூறியுள்ளதன் மூலம் இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட அனைவரும் மரணித்து விட்டார்களா? எனவும் கேள்வி எழுப்பினார். பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான நான்காம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் கூறுகையில், "பாதுகாப்புக்கு ஒதுக்கப் பட்ட நிதியில் குறிப்பிடத்தக்க அளவாவது இந்த நாட்டில் வாழ முடியாது தத்தளிக்கும் காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் உறவுகளுக்காக ஒதுக்கியிருக்கலாம். இந்த வரவு - செலவுத் திட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காக கடந்த 12 வருடங்களாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும், அவர்களுக்கான நீதியோ - நியாயமோ இன்றுவரை கிடைக்கவில்லை.

குறிப்பாக இப்போது மரண சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டால் 25 ஆயிரம் ரூபாய், 40 ஆயிரம் ரூபாய், 75 ஆயிரம் ரூபாய், ஒரு இலட்சம் ரூபாய் என்ற அடிப்ப டையில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்த நிதிக்காக எமது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராடவில்லை. தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற் காகவே போராடுகின்றனர். தமக்கு ஏற்பட்ட இழப்பு தமது அடுத்த சந்ததிக்கும் ஏற்படக் கூடாது என்பதற்காகவே போராடுகின்றனர்.

ஐ.நாவால் இந்த அரசுக்குப் பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. குறிப்பாக 30/1தீர்மானம், 34/1 தீர்மானம், 40/1 தீர்மானம், 46/1 தீர்மானம் ஆகியன இலங்கை அரசு தொடர்பில் நிறைவேற்றப்பட்டன. ஆனால், இதனை ஏற்று எந்தப் பணியையும் செய்யும் நிலையில் அரசு இல்லை.

உள்ளகப்பொறிமுறை மூலமே தீர்வு என்கின்றது அரசு. கடந்த 12 வருடங்களில் உள்ளகப் பொறிமுறையால் ஏதாவது ஒரு நல்ல விடயமாவது நடந்துள்ளதா?காணாமல் போனவர்களின் உறவுகளுக்காவது நல்ல விடயம் நடந்துள்ளதா?எதுவுமே நடக்கவில்லை.

இந்த நாட்டிலே 1980 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் 80 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் பேர் வரை காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். 2009ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 700 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். 70 ஆண்டுகளாக எமது இனம் சந்தித்த இழப்புக்கள் எந்த அரசாலும் ஈடுசெய்ய முடியாதவை.

ஐ.நா. அமர்வில் காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் தான் மரண சான்றிதழ் வழங்குவேன் என இந்த நாட்டின் ஜனாதிபதி ஒரு கருத்தைக் கூறியுள்ளார். அப்படியானால் காணாமல்ஆக்கப்பட்ட அனைவரும் மரணித்து விட்டார்களா?

எமது சமூகம் சலுகைகளுக்குச்சோரம்போன சமூகம் அல்ல. தமது உரிமைக்காகப் போராடுகின்ற இனம்" - என்றார். (இ)



## எவ்-16 நவீன போர் விமானங்களை படையில் இணைத்தது தாய்வான்!

தைபே, நவ. 19
சீனாவின் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் தாய்வான் தனது பாதுகாப்பு திறன்களை வலுப்படுத்தி வருகிறது. அதன் ஓர் அங்கமாக மேம்படுத்தப்பட்ட எவ்-16 அதி நவீன போர் விமானங்கள் தாய்வான் விமானப் படையில் இணைக்கப்பட்டுள்ளன.

எவ்-16 போர் விமானங்களை விமான படையில் இணைக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றது. சியாயில் உள்ள விமானப்படை தளத்தில் இடம் பெற்ற நிகழ்வில் தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென் பங்கேற்று மேம்படுத்தப்பட்ட 64 எவ்-16 போர் விமானங்களை சேவையில் ஈடுபடுத்தினார்.

தாய்வானிடம் தற்போது புனரமைக்கப்பட்டவை உட்பட மொத்தம் 141 எவ்-16 போர் விமானங்கள் உள்ளன. எஞ்சிய அனைத்து விமானங்களும் 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் முழுமையாக மேம்படுத்தப்படவுள்ளது.

அமெரிக்க பாதுகாப்புத் துறையுடன் தாய்வானின் ஒத்துழைப்பின் வலிமையை இந்த விமானங்களை மேம்படுத்தும் திட்டம் காட்டுகிறது என தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென் கூறினார்.

தாய்வானை சீனா உரிமை கொண்டாடி வரும் நிலையில், அந்த நாடு தன்னை சுதந்திர நாடு என்று கூறி வருகின்றது. இந்த நிலையில், தாய்வான் தனது படை பலத்தை அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐரோப்பாவில் தொற்று உச்சம் மீண்டும் தீவிர கட்டுப்பாடுகள்!

லண்டன், நவ. 19
ஐரோப்பாவின் பெரும்பாலான நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் விரைவாக அதிகரித்து வரும் நிலையில் பல நாடுகள் கட்டுப்பாடுகளைக் கடுமையாக்கி வருகின்றன.

ஜேர்மனியில் புதன்கிழமையன்று புதிதாக 52 ஆயிரத்து 826 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் நாடு நான்காவது அலையின் மோசமான பிடியில் சிக்கியுள்ளதாக நாட்டின் தலைவர் ஏங்கலா மெர்கல் தெரிவித்துள்ளார். கொரோனா நெருக்கடி குறித்த பிராந்திய தலைவர்களுடனான சந்திப்பில் ஏங்கலா மெர்கல் இவ்வாறு கூறினார்.

இதேவேளை, பெல்ஜியத்திலும் தொற்று அதிகரித்து வரும் நிலையில் அங்கும் கடுமையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. கொரோனா குறித்து வரும் எச்சரிக்கை சமிக்ஞைகள் தீவிரமாக உள்ளன என பெல்ஜியம் பிரதமர் அலெக்ஸாண்டர் டெ க்ரூ தெரிவித்துள்ளார்.

பெல்ஜியத்தில்12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்கள் மட்டுமே முகக்கவசம் அணிய வேண்டும் என்றிருந்த நிலையில் தற்போது 10 வயதுக்கு மேற்பட்ட



சிறுவர்கள் அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சனிக்கிழமையிலிருந்து ஒரு மாத காலத்திற்கு ஊழியர்கள் வீட்டிலிருந்து பணிபுரிவது கட்டாயமாக்கப்படுவதாக பெல்ஜியம் அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும், ஆஸ்திரியாவிலும் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் அங்கு தடுப்பூசி போடாத சுமார் 20 இலட்சம் மக்கள் அத்தியாவசிய தேவைகள் தவிர வீடுகளை விட்டு வெளியேற கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நெதர்லாந்திலும் இதுவரை இல்லாதளவு தொற்று நோயாளர்கள் அதிகளவு பதிவான நிலையில் அங்கு பகுதி அளவிலான முடக்க நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று சுவீடனில் தொற்று நோய் அதிகரித்ததை அடுத்து 100இற்கும் மேற்பட்டோர் பங்கேற்கும் கச்சேரிகள் மற்றும் பிற உட்புற நிகழ்வுகளில் பங்கேற்போருக்கு தடுப்பூசி அட்டை கட்டாயம் என அறிவிக்கப்பட்டுள்ளது. டிசெம்பர் 1 முதல் இந்த நடவடிக்கை அமுலுக்கு வருகிறது.

செக் குடியரசில் கொவிட் 19 தடுப்பூசி பெறாத எவரும் பொது நிகழ்வுகள் அல்லது சேவைகளை அணுக தடை விதிக்கப்படும் என செக் குடியரசின் பிரதமர் ஆண்ட்ரேஜ் பாபிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரான்ஸில் ஓகஸ்ட் மாதத்திற்குப் பிறகு முதல் முறையாக புதன்கிழமை 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டன என்று அரசாங்க செய்தித் தொடர்பாளர் கேப்ரியல் அட்டலின் உறுதி செய்தார். எனினும், கட்டாய தடுப்பூசி பாஸ் நடைமுறையைத் தாண்டி பெரும் கட்டுப்பாடுகளை பிரான்ஸ் இதுவரை விதிக்கவில்லை. (ஐ)

## வன்கூவரை துண்டித்தது வெள்ளம்! மழையை இனி கணிப்பது கடினம்!!



வன்கூவர், நவ. 19
உலகின் பல பகுதிகளிலும் வழமைக்கு மாறாக அதீத மழையும் வெள்ளமும் ஏற்பட்டு வருகின்றன. கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் இரு தினங்கள் அடித்த புயல் மழையால் வன்கூவர் நகரம் நாட்டின் பிற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்படும் நிலை எழுந்துள்ளது.

இந்த நிலையில், வெள்ளம், மண்சரிவு, மலைச்சரிவு காரணமாக ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

'வளிமண்டல நதி' எனப் பெயர் குறிப்பிடப்படுகின்ற கடும் ஈரப்பதன் மிகுந்த காற்றலை ஒரு நதி போன்று உருவாக்கிப் பறந்து பிரிட்டிஷ் கொலம்பியாவின் மேற்குப் பகுதி மீது வெள்ளத்தைக் கொட்டிவிட்டுச் சென்றிருப்பதாக வானிலை வல்லுநர்கள் கூறுகின்றனர்.

வெப்ப மண்டலப் பகுதிகளில் இருந்து துருவங்களை நோக்கி வீசுகின்ற காற்றின் அதிக ஈரப்பதன் காரணமாக அதனை 'வளிமண்டல நதி' என்று குறிப்பிடுகின்றனர். வன்கூவர் பகுதி ஒரு மாதத்தில் பெறுகின்ற மழைவீழ்ச்சியின் மொத்த அளவை 24 மணி நேரத்தில் கொட்டிவிட்டுப் போயிருக்கிறது அந்த அசுர 'வான்நதி'. அனர்த்த அவசர கால நிலை அங்கு அறிவிக்கப் பட்டிருக்கிறது. வெள்ளத்தில் சிக்குண்டவர்களை மீட்க இராணுவம் அழைக்கப்பட்டிருக்கிறது.

சந்தேகத்துக்கு இடமே இல்லை. இது பருவநிலை மாறுதலின் நேரடி விளைவுதான்" - என்று அடித்துக் கூறியிருக்கிறார் பிரிட்டிஷ் கொலம்பியாவின் அமைச்சர் ஒருவர். கனடாவின் இதே பிராந்தியம் கடந்த கோடையின்போது வெப்ப அனல் காரணமாக வெந்து தணிந்தது. அங்கு ஒரு கிராமத்தையே முழுமையாகத் தீ விழுங்கியது நினைவிருக்கலாம். வெப்பம், வெள்ளம் என மாறி மாறி வெளுத்து வாங்குகிறது இயற்கை. (ஐ)

## அசர்பைஜான் - ஆர்மீனியா மீண்டும் போர் மூண்டது!

### 8 இராணுவத்தினர் உயிரிழப்பு

மொஸ்கோ, நவ. 19
அசர்பைஜான், ஆர்மீனியா நாடுகளிடையே மீண்டும் போர் தொடங்கியுள்ளது. இந்தப் போரில் இதுவரை 8 பேர் உயிரிழந்தனர் என்று தெரிய வருகின்றது.

இந்த இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக நாக்ரோன - கராபாக் மாகாண உரிமை தொடர்பில் முரண்பாடு நிலவுகிறது. கடந்த ஆண்டும் செப்ரெம்பர் மாதம் இந்த நாடுகள் போரில் ஈடுபட்டன.

6 வாரங்கள் நீடித்த இந்தப் போரில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். ரஷ்யாவின் தலையீட்டை தொடர்ந்து இரு நாடுகளும் அமைதிக்கு திரும்பின.

இருப்பினும், இரு நாடுகளும் அடிக்கடி சிறுசிறு சண்டைகளில் ஈடுபட்டன. இந்த



நிலையில் நேற்றுமுன்தினம் இரு நாட்டு படைகளும் பெரியளவிலான போரில் குதித்தன. இதில் 8 படையினர் உயிரிழந்தனர். இறந்தவர்களில் 7 பேர் அசர்பைஜான் இராணுவத்தினர், ஒருவர் ஆர்மீனியா படையினர் என்றும் தெரிய வருகின்றது.

இதேவேளை படையினர் சிலரும் பிடிக்கப்பட்டுள்ளனர். இதனால், போர் மேலும் தீவிரமாகலாம் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## தொடர் வன்புணர்வு குற்றவாளி கொரோனா தொற்றால் மரணம்!

லண்டன், நவ. 19
இங்கிலாந்தில் 25 வன்புணர்வு குற்றங்களை செய்தமைக் காக தண்டனை பெற்று வந்த நபர் கொரோனா தொற்றால் உயிரிழந்தார்.

ஹின்ட்லி நகரை சேர்ந்த ரென்னிஸ் ஸ்மலி என்பவரே இவ்வாறு மரணமாமார். 70 வயதான இவர் 1970 ஆம் ஆண்டு முதல் இவர் பல பெண்களை பாலியல் வன்புணர்வு செய்துள்ளார்.

2016ஆம் ஆண்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அவர்மீது 25 பாலியல் வன்பு ணர்வுகள் உட்பட 44 வழக்கு கள் பதிவு செய்யப்பட்டன. வழக்கு முடிவில் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்ட இவருக்கு 25 ஆண்டுகள் கடுங்காவல் சிறை விதிக்கப்பட்டது.

ரென்னிஸ் வாக்பில்ட் நகர சிறையில் அடைக்கப்பட்ட இவர் அண்மையில் தொற்றால் பாதிக்கப்பட்டார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# நியூசிலாந்து அணியை தடுமாறி வென்றது இந்தியா!

ஜெய்ப்பூர், நவ. 19

ரோஹித் சர்மா, சூர்யகுமார் யாதவின் பொறுப்பான துடுப்பாட்டத்தால் நியூசிலாந்துக்கு எதிரான முதல் இருபது - 20 போட்டியில் இந்திய அணி 5 விக்கெட்களால் தட்டுத் தடுமாறி வென்றது.

ஜெய்ப்பூரில் நடந்த இந்தப் போட்டியில் முதலிலி துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 164 ஓட்டங்கள் குவித்தது. 165 ரன்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி, 2 பந்துகள் மீதமிருக்கையில் 5 விக்கெட்களை இழந்து 166 ஓட்டங்கள் சேர்த்து 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

நியூசிலாந்துக்கு அணிக்கு எதிராக கடந்த 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி மவுண்ட்மவுங்கனியில் நடந்த இருபது - 20 போட்டியில் இந்திய அணி கடைசியாக வென்றது.

அதன்பின் நடந்த ஒருநாள் தொடர், டெஸ்ட் தொடர், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப், இருபது - 20உலகக்கிண்ணம் என நியூசிலாந்து அணிக்கு எதிராகத் தொடர்ந்து 7 தோல்விகளை இந்திய அணி சந்தித்தது. அந்த 7 தொடர் தோல்விகளுக்கும் தற்போது முற்றுப்புள்ளி வைத்துள்ளது ரோஹித் படை.

இந்திய அணி அடுத்த மாற்றத்தை நோக்கி நகர்ந்துள்ளது. தலைமைப் பயிற்றுவிப்பாளர் ராகுல் டிராவிட், அணித் தலைவர் ரோஹித் சர்மா இருவர் தலைமையில் இந்திய அணி சந்திக்கும் முதல் தொடர் இதுவாகும். இருவருக்குமே இது முக்கியமான தொடராக இருப்பதால் பெரிதும் கவனத்தை ஈர்த்துள்ளது. 40 பந்துகளில் 62 ஓட்டங்கள்(3சிக்ஸர், 6 பௌண்ட்ரி) குவித்த சூர்யகுமார் யாதவுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது.

இந்திய அணியை பொறுத்தவரை சூர்யகுமார், ரோஹித் சர்மா இருவரும்தான் துரத்தல் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தனர். புவனேஷ்வர் குமார் நீண்ட காலத்துக்குப்பின் கட்டுக்கோப்பாகப் பந்துவீசி பவர்ப்ளேயில் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார். இருபது - 20 உலகக்கிண்ணத்திலும் ஐ. பி. எல். தொடரிலும் சொதப்பியபின் நேற்றைய பந்துவீச்சு ஓரளவுக்கு பரவாயில்லை ரகத்தில்தான் இருந்தது.

அஸ்வின் தனது தேர்வை எப்போதும் நியாயப்படுத்துகிறார். இந்த ஆட்டத்திலும் கட்டுக்கோப்பாக வீசிய அஸ்வின் 23 ஓட்டங்கள் கொடுத்து 2 விக்கெட்களை வீழ்த்தினார்.

ஐ. பி. எல். தொடரில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியில் தொடக்க வீரராகக் களமிறங்கிய வெங்கடேஷ் ஐயர் நேற்றுமுன்தினம் சர்வதேச போட்டியில் அறிமுகமாகினார். சகலதுறை வீரரான வெங்கடேஷுக்கு ஓர் ஓவர்கூட பந்து வீச வாய்ப்பளிக்கப்பட வில்லை.

இதேபோல கார்திக் பாண்ட்யா களமிறங்கும் இடத்தில் வெங்கடேஷை களமிறக்கி நேற்று சோதித்தனர். இது தவறான முடிவு. சர்வதேச அனுபவம் ஏதும் இல்லாத வெங்கடேஷை, கடைசி ஓவரில் நெருக்கடியான நேரத்தில் ஓட்டம் எடுக்க வைப்பது நெருக்கடியில் தள்ளுவதாகும். இதில் ஒருவேளை வெங்கடேஷ் ஓட்டம் எடுக்க முடியாமல் இந்திய அணி தோல்வி அடைந்திருந்தால், வெங்கடேஷ் வாழ்க்கையே வீணாகியிருக்கும்.

ஸ்ரேயாஸ் ஐயர், ரிஷப் பந்த் இருவருமே துடுப்பாட்டத்தில் சொதப்பினர். எளிதாக பெற வேண்டிய வெற்றியை, கடினமாக்கி, ரசிகர்களுக்கு பதற்றத்தை ஏற்றியதே இருவரும்தான்.

கடைசி 3 ஓவர்களில் வெற்றிக்கு 21 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ரிஷப் பந்த், ஸ்ரேயாஸ் களத்தில் இருந்தனர். இருவருமே அனுபவமான துடுப்பாட்ட வீரர்கள். இருவருமே போட்டியின் வெற்றிக்காக ஓட்டங்களை அடிக்கவில்லை.

பெர்குஷன் ஓவரையும், சௌதி ஓவரையும் இருவரும் தடவித்தடவி ஓட்டம் சேர்த்து ஆட்டத்தை நெருக்கடிக்குள் தள்ளினர். இயல்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்த முடியாமல் ஸ்ரேயாஸ் சிரமப்பட்டார். அவர் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

கடைசி ஓவரை மிட்ஷெல் வீசினார். வெற்றிக்கு 10 ஓட்டங்கள் தேவைப்பட்டன. சர்வதேச போட்டியில் தனது முதல்பந்தை சந்தித்த வெங்கடேஷ் பௌண்ட்ரி அடித்து அசத்தினார். ஆனால், அடுத்த பந்தில் ஸ்வீப் ஷொட் அடித்து ஆட்டமிழந்தார். அடுத்துவந்த அக்ஸர் பட்டேல், ஓர் ஓட்டம் எடுக்க, ரிஷப் பந்த் பௌண்ட்ரி அடித்து வெற்றி பெற வைத்தார். ரிஷப் பந்த் 17 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்

கே.எல். ராகுல், ரோஹித் நல்ல தொடக்கம் அளித்தனர். 10 ஓட்ட சராசரியில் அணியைக் கொண்டு சென்று, 5 ஓவரில் 50 ஓட்டங்களை எட்ட வைத்தனர். ஆனால், சான்ட்னர் பந்துவீச்சில் ராகுல் 15 ரன்னில் ஆட்டமிழந்தார். முதல் விக்கெட்டுக்கு இருவரும் 50 ஓட்டங்களும், பவர்ப்ளேயில் 56 ஓட்டங்களும் சேர்த்தனர்.

2ஆவது விக்கெட்டுக்கு சூர்யகுமார், ரோஹித் இருவரும் இணை சேர்ந்துதான் அணியை வெற்றி நோக்கி நகர்த்தினர். 2ஆவது விக்கெட்டுக்கு இருவரும் 59 ஓட்டங்கள் சேர்த்தனர். ரோஹித் சர்மா 2 ஓட்டங்களில் அரை சதத்தை தவறவிட்டு 48 ஓட்டங்களுடன் (36பந்து, 2 சிக்ஸர், 5 பௌண்ட்ரி) ஆட்டமிழந்தார்.




சூர்யகுமார் யாதவ் நிதானத்துடனும், பொறுப்புடன் துடுப்பெடுத்தாடி செய்து 34 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். 62ஓட்டங்கள் சேர்த்த சூர்யகுமார், டிரண்ட்போல்ட் பந்துவீச்சில் போல்ட் ஆக்கினார். 144 ஓட்டங்கள்வரை 2 விக்கெட்டை இழந்த இந்திய அணி அடுத்த, 16 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்களை இழந்தது.

நியூசிலாந்து அணியைப் பொறுத்தவரை வழக்கமான அணித் தலைவர் வில்லியம்சன் இல்லாத நிலையில் சௌதி தலைமை பொறுப்பேற்றார். 164 ஓட்டங்கள் நல்லபடியாக தற்காப்பு செய்யக்கூடிய ஓட்டம்தான். அதையும் நியூசிலாந்து அணியினர் கடைசி ஓவர்வரைஆட்டத்தைச் எடுத்துச்சென்றனர்.

மிற்செல் 18ஆவது ஓவரையும், பெர்குஷன் கடைசி ஓவரையும் வீசியிருந்தால், நிச்சயம் ஆட்டம் நியூசிலாந்து பக்கம் மாறியிருக்கும். மிற்செல் சிறந்த சகலதுறை வீரர், அனுபவமற்ற பந்துவீச்சாளர் இல்லை, 18ஆவது ஓவரின்போது 21 ஓட்டங்கள் இந்திய அணிக்கு தேவைப்பட்டது. ஆதலால் மிற்செல்லை வீசச் செய்து, பெர்குஷனுக்கு கடைசி ஓவரை வழங்கியிருக்க வேண்டும். மற்ற வகையில் சௌதியின் தலைமைத்துவம் சிறப்பாகவே இருந்தது.

நியூசிலாந்து அணியில் மிற்செல் நடுவரிசையில் களமிறங்கி விளையாடக்கூடிய சகலதுறை வீரர் அவரை தொடக்கத்தில் களமிறக்கியதால், டக்அவுட்டில் புவனேஷ்வர் பந்துவீச்சில் வெளியேறினார். சாப்மேன், குப்தில் இருவரும் 2ஆவது விக்கெட்டுக்கு நல்ல இணைப்பாட்டம் ஏற்படுத்தினர். சாப்மேன் 50 பந்துகளில் 63 ஓட்டங்கள் சேர்த்து அஸ்வின் வீசிய 14ஆவது ஓவரில் ஆட்டமிழந்தார். 2ஆவது விக்கெட்டுக்கு இருவரும் 109 ஓட்டங்கள் சேர்த்துப் பிரிந்தனர். அஸ்வின் வீசிய அதே ஓவரின் கடைசிப்பந்தில் பிலிப்ஸ் கால்காப்பில் வாங்கி ஆட்டமிழந்தார்.

அதன்பின் வந்த வீரர்கள் யாரும் நிலைக்கவில்லை. ரிம் ஷீபெர்ட் 12, ரவிந்திரா 7 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். குப்தில் 42 பந்துகளில் 70 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். இதில் 4 சிக்ஸர், 3 பௌண்ட்ரி அடங்கும். (ஐ)

# உலக பெண்கள் ரென்னிஸ்; சம்பியன் வென்றார் முகுருசா

மெக்சிக்கோசிற்றி, நவ. 19

உலக பெண்கள் ரென்னிஸ் சம்பியன்ஷிப்பின் இறுதிப் போட்டியில் ஸ்பெய்னின் கார்பைன் முகுருசா, அனெட் கொன்டவீட்டை தோற்கடித்து சம்பியனானார்.

முதல்நிலை 8 வீராங்கனைகள் பங்கேற்றுள்ள டபிள்யூ. ரி. ஏ. இறுதி சுற்று எனப்படும் உலக பெண்கள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி மெக்சிகோவின் குவாடலஜரா நகரில் நடந்து வருகிறது.

இதில் புதன்கிழமை இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்பெய்ன் வீராங்கனை கார்பைன் முகுருசாவும், ஸ்தோனியாவைச் சேர்ந்த அனெட் கொன்டவீட்டும் மோதினர்.



இந்த ஆட்டத்தில் 6-3 7-5 என்ற செற் கணக்கில் அனெட் கொன்டவீட்டை தோற்கடித்தார் கார்பைன் முகுருசா.

அவரின் வெற்றி ஸ்பெய்னுக்கு முதன்முறையாக டபிள்யூ. ரி. ஏ. பட்டத்தை பெற்றுத் தந்தது.

# 2022 உலக கிண்ணத்துடன் ஓய்வு பெறுகிறார் வேட்

ஷசிட்னி, நவ. 19

2022 இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக்கு பிறகு சர்வதேச கிரிக்கெட்டில் விளையாட மாட்டேன் என அவுஸ்திரேலிய அணியின் விக்கெட் காப்பாளர் மத்தியூ வேட் அறிவித்துள்ளார்.

33 வயதான வேட், ஆஸி. அணிக்காக 36 டெஸ்ட், 97 ஒருநாள், 55 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதி போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்கள் எடுத்து ஆஸி. அணிக்கு வெற்றியை அளித்தார்.



இந்நிலையில் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் 2022 இருபது - 20 உலகக்கிண்ணத்துடன் ஓய்வு பெறுவதாக வேட் அறிவித்துள்ளார்.

# பதவியிலிருந்து விலகப் பிரதமர் மஹிந்த தயார் தென்னிலங்கை ஊடகங்களில் பரபரப்புச் செய்தி

கொழும்பு, நவ. 19

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அடுத்த மூன்று மாதங்களுக்குள் பதவி விலகத் தீர்மானித்துள்ளார் என்று அவருக்கு நெருக்கமான தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்று தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அநுராதபுரத்தில் ருவன்வெளிசாயவில் புத்த பெருமான் விஜயம் செய்த எட்டு தளங்கள் இருக்கின்றன. இதற்கு மேலதிகமாக ஒன்பதாவது தளத்தை (விகாரையை) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திறந்துவைக்கவுள்ளார்.

இது பௌத்த மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. எனினும், இது பௌத்த பெருமானின் வரலாற்றுச் சிறப்பு மிக்க ருவன்வெலியவில் சேர்க்கப்படாது என்ற கருத்தும் சிங்கள - பௌத்தர்கள் மத்தியில் இருக்கிறது.

இந்தநிலையில், குறித்த விகாரையை திறந்துவைத்த பின்னர் பிரதமர் பதவியில் இருந்து விலகி, அரசியலில் இருந்து ஓய்வுபெற மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதமரின் உடல் நிலை மோசமாகி வருவதால் இந்தத் தீர்மானத்தை அவர் எடுத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்தநிலையில், பிரதமர் பதவிக்கு பஸில் ராஜபக்ஷவை அல்லது நாமல் ராஜபக்ஷவை நியமிப்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது எனப் பிரதமருக்கு நெருக்கமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

(இ)





## தோட்ட அதிகாரிக்கு எதிராகப் போராட்டம்

அவிசாவளை, நவ. 19

அராஜகத்தில் ஈடுபடும் தோட்ட அதிகாரியை பதவி நீக்கம் செய்யுமாறு வலியுறுத்தி அவிசாவளை, பென்றிக் தோட்ட மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு - அவிசாவளை பிரதான வீதியில் பென்றிக் தோட்டத்துக்குச் செல்லும் வழியை மறித்தே அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

தோட்ட நிர்வாகத்தின் அனுமதியுடன் பென்றிக் தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றை, தோட்ட அதிகாரி பலவந்தமாக உடைத்துள்ளார். இதனைத் தடுக்க முற்பட்ட வயோதிபப் பெண்ணையும் தாக்கியுள்ளார் என மக்கள் தெரிவித்துள்ளனர். இதையடுத்து குறித்த வயோதிபப் பெண்ணின் மகள்மார், தோட்ட அதிகாரியைத் தாக்கியுள்ளனர்.

வயோதிபப் பெண்ணும், தோட்ட அதிகாரியும் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பொலிஸாரும் தோட்ட அதிகாரிக்குச் சார்பாகவே செயற்படுகின்றார் என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்நிலையிலேயே பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதி வேண்டும் எனவும், குறித்த தோட்ட அதிகாரியை பணி நீக்குமாறு வலியுறுத்தியும் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(இ)

## ஹெரோயினுடன் 5 பேர் மாட்டினர்!

கொழும்பு, நவ. 19

பொலிஸார் மேற்கொண்ட போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் ஹெரோயினுடன் 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அய்லப்பெரும பிரதேசத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 12 கிராம் 68 மில்லிகிராம் ஹெரோயினுடன் கோரகஹவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாதம்மாவத்தை, தொட்டலங்க ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட மேற்கொள்ளப்பட்ட இரு சுற்றிவளைப்புகளில் 17 கிராம் ஹெரோயினுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஒருகொடவத்த, கொழும்பு 14 ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 22, 31 வயதுடைய இருவரே இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா - வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்கல்பிட்டிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 07 கிராம் 20 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா, துன்கல்பிட்டிய பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது 07 கிராம் 20 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயது நபரே இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளார்.

(இ)

### 1,160 ஊழியர்கள் பணியாற்றி வரும்

## அம்பாந்தோட்டை சிமெந்து தொழிற்சாலையில் 45 இந்திய பிரஜைகளுக்கு கொரோனா உறுதி

கொழும்பு, நவ. 19

**அம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் சிமெந்து தொழில்சாலையில் பணியாற்றிவரும் 45இந்தியப் பிரஜைகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என தென்மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.**

அம்பந்தோட்டை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தால் குறித்த சிமெந்து தொழிற்சாலையில் பணியாற்றிவரும் 50 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 45 இந்திய பிரஜைகளுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது தொற்றுக்குள்ளான தொழி லாளர்கள், அம்பாந்தோட்ட பழைய வைத்தியசாலையில் உள்ள கொரோனா சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

குறித்த தொழிற்சாலையில் தமிழர்கள், சிங்களவர், இந்தியர்கள் உள்ளடங்களாக 1,160 ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். சுமார் 480 இந்தியர்கள் குறித்த தொழிற்சாலையில் பணியாற்றி வருகின்றனர்.

தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

(இ)

## ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட இளைஞர் பொலிஸாரின் தாக்குதலில் உயிரிழந்தாரா?

### இல்லை என்று மறுக்கின்றார் அமைச்சர் வீரசேகர

கொழும்பு, நவ. 19

எம்பிலிப்பிட்டி பகுதியில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தபோது உயிரிழந்த நபருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியால் கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்கும் இடையே எந்தத் தொடர்பும் கிடையாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இந்நிலையில், குறித்த நபர் தமது ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர் என்றும், அவர் பொலிஸாரின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார் என்றும் எதிர்க்கட்சியினர் முன்வைக்கும் குற்றச்சாட்டில் உண்மையில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சியினர் முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பில் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எதிர்க்கட்சியினர் மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர். செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஒருவரைக் கைதுசெய்து கொண்டு செல்லும்போதே பொலிஸாரின் தாக்குதலில் அவர் கொல்லப்பட்டுள்ளார் என்று அவர்கள் கூறியுள்ளனர். இது முற்றிலும் பொய்யாகும்.

இந்த நபரின் பெயர் இந்திக ஜயரட்ணவாகும். 37 வயதுடைய குறித்த நபர் பானமுரே பகுதியில் வசித்து வந்துள்ளார். அவர் போதைப்பொருளுக்கு அடிமையானவராவார். அவர் அடிக்கடி தனது மனைவி மற் றும் பிள்ளைகள்மீது தாக்குதல் நடத்தியுள்ள நிலையில் அது தொடர்பில் மனைவியும் பிள்ளைகளும் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி அவருக்கு எதிராக அவரின் மகள் முறைப்பாடு செய்துள்ளார். அதன்பின்னர் குறித்த நபர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்துள்ளார். இதன்போது தலைமறைவாகியிருந்த அவர், செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணியளவில் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவருக்கும் குறித்த ஆர்ப்பாட்டத்துக்கும் இடையே எந்தத் தொடர்பும் கிடையாது.

அவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட பின்னர், அதிகாலை 3.30 மணியளவில் அவர் அணிந்திருந்த சேர்ட் மூலம் சிறைக்கூடத்தினுள் தூக்கிட்டு தொங்கி உயிர் போவதற்கு இருந்த தறுவாயில் அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அதனைக் கண்டு அவரை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது அவர் உயிரிழந்தனர். இதற்கும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கும் தொடர்பும் கிடையாது. இந்த விடயத்தில் பொலிஸார் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யாகும்" - என்றார்.

(இ)

## மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் சிக்கினர்

நுவரெலியா, நவ. 19

நுவரெலியா, பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செப்பல்டன் தோட்டத்தில் அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த 25, 31 வயதுகளையுடைய இருவரே இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாட்டில் இரத்த...

போரில் உயிரிழந்த இராணுவத்தினர் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட சந்தஹிரு சேய தூபியை அநுராதபுரத்தில் நேற்று திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறிய முக்கிய அம்சங்கள் வருமாறு,

"வரலாறு முழுவதும் நாம் போர்க் களத்தில் வென்றது திறமை மற்றும் துணிச்சலால் மட்டுமல்ல. இந்த நாட்டை ஒன்றிணைத்த துட்டகைமுனு மன்னர் வரலாற்று ரீதியாக எமக்கு அறிமுகப் படுத்திய உன்னதமான மனிதாபிமான மரபுகளை நாம் இன்றும் வரலாறு முழு வதிலும் பின்பற்றுவதே இதற்குக் காரண மாகும்.

"ஒரு நாட்டின் பாதுகாப்புப் படை மீது நம்பிக்கை இன்றேல், அந்நாட்டின் தேசிய பாதுகாப்பை இழக்க நேரிடும் என்றே அனைவரும் நம்புகிறார்கள். அதே போன்று, எமது இராணுவத்தை மறந்து விட்டு, வெளிநாட்டுப் படைகளையும், வெளிநாட்டுத் தலையீடுகளையும் அனுமதித்தால், எமது நாட்டில் இரத்த வெள்ளமே பாயும்.

"இந்த சந்தஹிருசேயவின் மூலம் நினைவுகூரப்படும் போர் வீரர்களின் மனிதாபிமானப் பணியானது எமது வர லாற்றில் சுதந்திரத்திற்காக நடத்தப்பட்ட மிகக் கடினமான போர்களில் ஒன்றாக நான் கருதுகிறேன். விடுதலைப் புலி களுக்கு எதிரான போர் தொடங்கும் முன் அப்போதைய இங்கிலாந்து பிரதமரை சந்தித்தது எனக்கு நினைவிருக்கிறது.

"விடுதலைப் புலிகளை நிராயுதபாணி யாக்கி நாட்டில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கூறியபோது, அது சாத்தியம் என்று நான் நினைக்கவில்லை என்று கூறினார். அதைப் பற்றி சில விட யங்களைச் கூறினார். இந்த விவகாரம் ஏற்கனவே சர்வதேச அரங்கிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அப்போது அவர் கூறினார்.

"சர்வதேச அளவில் பல நாடுகளின் பங்களிப்புடன் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இப்போது அதி லிருந்து விடுபட முடியாது என்று கூறி னார். இரண்டாவது விடயம் புலிகளுக்கு ஏற்கனவே தனியான கட்டுப்பாட்டு பகுதி கள், தனி வங்கிகள் மற்றும் தனியான நிதிகள் உள்ளன. தனியான நிர்வாக அமைப்பு இருக்கிறது, அதுவரை நம் அர சாங்கங்கள் பார்த்துக் கொண்டிருந்துள் ளன. தற்போது எதுவும் செய்வதற்கில்லை என்று தெரிவித்தார்.

"மேலும், புலிகளில் தற்கொலை குண்டு தாரிகளும் உள்ளனர். ஏவுகணைகள், பீரங்கிகள் உள்ளன. கப்பல்கள், போர் விமானங்கள் மற்றும் விமானங்கள் உள் ளன. உங்களால் அவர்களை எதிர்கொள்ள முடியுமா என்று இங்கிலாந்து பிரதமர் அன்று என்னிடம் கேட்டார். உலகமே அவ்வாறு கூறிய போதும் எமது சொந்த மக்களின் பிள்ளைகளான எமது போர் வீரர்கள்மீது மிகுந்த நம்பிக்கை வைத் திருந்தோம்.

"எமது போர்வீரர்கள் ஈடு இணையற்ற தியாகத்தை செய்தனர். உலக வல்லரசு கள் கையெழுத்திட்ட போர் நிறுத்த ஒப் பந்தத்தையும் கிழித்தெறிந்தோம். எமது போர் வீரர்களுக்கு எதிரான ஐ. நா. தீர் மானத்தின் இணை அனுசரணையிலி ருந்து நாம் தற்போது விலகியுள்ளோம். இவற்றின் தாக்கம் இப்போது நமக்கு எதி ராக வருவதை நாம் அறிவோம். ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக நமது சுதந்தி ரம் நமக்கு முக்கியம்.", என்றார். (ஐ)

## மகேஷ்...

அமெரிக்காவின் இராணுவ கட்டளை மற்றும் பொது பணியாளர்கள் கல்லூரி வழங்கியுள்ளது.

இராணுவ தகுதி மூலம் தங்கள் நாட் டின் ஆயுதப் படைகளில் மிக உயர்ந்த பதவிகளை அடைந்ததுடன் தங்கள் தொழில் கண்ணியத்தை பாதுகாத்தவர் களுக்கு இந்த விருது வழங்கப்படுகின் றது.

இந்த ஆண்டுக்கான விருதை முன் னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேன நாயக்கவுக்கும் சிங்கப்பூர் ஆயுதப் படை களின் தளபதி லெப். ஜெனரல் பெர்ரி லிம் செங் இயோவவுக்கும் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதை பெற்ற முதலாவது இலங்கையர் மகேஷ் சேனநாயக்கா ஆவார்.

மகேஷ் சேனநாயக்க இலங்கை இராணுவத்தில் நீண்ட காலம் பணி யாற்றியவர். வடக்கு, கிழக்கின் பெரும் பாலான போர்களில் இவர் பங் கேற்றவர். வன்னி இறுதிப் போரில் இடம் பெற்ற மனித உரிமைகள், போர் குற்றங்கள் மீறல்கள் தொடர்பிலும் இவர்மீது குற்றச்சாட்டுக்கள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கார்த்திகை தீபம்...

டாடுவது வழமை. தீபத் திருநாளான நேற்று வழக்கம் போன்று மாலை 6 மணி முதல் வீடுகளில் தீபங்களை ஏற்றி தீபத் திருநாளை கொண்டாடினர்.

இந்த நிலையில், முல்லைத்தீவு இராணுவத்தினரும், இராணுவ புல னாய்வு பிரிவினரும் தீபம் ஏற்றியவர்களின் வீடுகளுக்கு சென்று தீபங்கள் ஏற்றியமை தொடர்பில் விசாரித்தனர். அத்துடன், புலிகளை நினைவேந்தும் விதத்தில் எந்த நிகழ்வுகளிலும் ஈடுபடக்கூடாது என்றும் அவர்கள் எச்சரித்து சென்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீ ரர் நாள் எதிர்வரும் 27ஆம் திகதி இடம் பெறவுள்ளது. அதனை நினைவுகூர அனு மதிக்கக்கூடாது என்று கோரி நீதிமன்றங் கள் மூலம் தடையுத்தரவுகள் வழங்கப் பட்டு வரும் நிலையிலேயிலேயே இந்தக் குழப்பம் இடம்பெற்றிருப்பதாகக் கூறப் படுகின்றது. (ஐ)

## யாழ்.பல்கலையில்...

தடைகளையும் தாண்டி யாழ்.பல்கலைக் கழகத்தில் மாணவர்களால் தீபம் ஏற்றப் பட்டது.

நேற்று மாலை 6 மணியளவில் பல் கலைக்கழகத்துக்கு கார்த்திகை விளக் கீட்டை கொண்டாடுவதற்கு சென்ற மாண வர்களுக்கு பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் உள்நுழைய அனு மதி மறுக்கப்பட்டது.

இந்நிலையில் பல்கலைக்கழகத்தில் ஆன்மீக ரீதியான செயல்பாடுகளை மேற் கொள்ளவும் தடை விதிப்பதா என மாண வர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டு பல் கலைக்கழகத்துக்குள் சென்று கார்த்திகை விளக்கீட்டு தீபங்களை ஏற்றினர்.

கடந்த வருடம் கார்த்திகை தீபம் ஏற் றியதற்காக யாழ்.பல்கலைக்கழக மாண வன் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. (அ)

## 737 பேருக்கு...

இதேவேளை, கொரோனாத் தொற் றால் பாதிக்கப்பட்ட மேலும் 372 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 25 ஆயிரத்து 560 ஆக உயர்வடைந்துள்ளது.

## கொரோனா...

உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண் ணிக்கை 14 ஆயிரத்து 72 ஆக அதிகரித் துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப் பட்ட 15 மரணங்களில் 5 பெண்களும், 10 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## மாவீரர்...

குடும்பங்களின் வீடுகளுக்கு சென்று தக வல்களை திரட்டினர் என்று கூறப்படுகின் றது. இராணுவத்தினரின் நடவடிக்கை யால் தாம் அச்சமடைந்துள்ளதாக அந் தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஐ)





# கார்த்திகை தீபத் திருநாளில் யாழில் நாவலர் சிலை திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 19

நாவலர் கலாசார மண்டபத்தின் நுழைவாயிலில் யாழ். மாநகர சபையின் உறுதுணையுடன் சைவ மகா சபையால் நிறுவப்பட்ட நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட் டது.

கார்த்திகை தீபத் திருநாளான நேற் றுக் காலை 10.30 மணியளவில் இறை வணக்கம் செலுத்தப்பட்டு நந்திக்கொடி ஏற்றப்பட்டதுடன் நாவலர் பெருமா னின் சிலை திறந்துவைக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் பிரதி மாநகர ஆணையாளர் பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன், அகில இலங்கை சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் பரா.நந்தகுமார் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

பருவ கால மழை நீர் முகாமையும் திருக்கோவில் குளங்களும் எனும் தலை மையில் சர்வராசாவின் சிறப்புரையும் இதன்போது இடம்பெற்றது. (இ - 03)

## தமிழர் பிரச்னை...

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமை யாக நிறைவேற்றுவது தொடர்பில் இலங் கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஸாரா ஹல்டன் அம்மையாருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ ஆராய்ந்தது.

நேற்று வியாழக்கிழமை 8.30 மணி தொடக்கம் கொழும்பில் அமைந்த உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இந்தச் சந்திப்பு நடை பெற்றது. சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்த இந்த சந்திப்பு தொடர்பில் ரெலோ கட்சி வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவையாவன,

இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஸாரா ஹல்டன் அம்மையாரு னான சந்திப்பு ஒன்றை கூட்டமைப்பினர் மேற்கொண்டிருந்தனர். இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கல நாதன், வினோ நோகராதலிங்கம், ரெலோ வின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் மற்றும் சட்டத்தரணி தயாபரன் ஆகி யோர் கலந்து கொண்டனர். வடக்கு, கிழக்கு பகுதிகளில் மக்கள் எதிர்கொள் ளும் பிரச்னைகள் மற்றும் ஐ. நா. பிரே ரணை சம்பந்தமாகவும் முக்கியமாக கலந் துரையாடப்பட்டன.

பிரித்தானியாவின் தலைமையிலே ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட 46/1 பிரேரணை யின் முக்கியத்துவம் அதில், உள்ளடக் கப்பட்ட விடயங்கள், அவற்றில் காணப் படுகின்ற முன்னேற்றங்கள், அதன் அடிப் படையில் செயல்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் என்பவற்றில் கவனம் செலுத் தப்பட்டது. கால வரையறையோடு கொண்டுவரப்பட்ட இந்த பிரேரணை யில் பிரேரிக்கப்பட்ட விடயங்களை நிறை வேற்ற 18 மாதங்களே உள்ளன. அதில் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய விடயங்கள் ஒருபுறம் இருக்க தமிழ் தரப்பினரால் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்களிலும் அக்கறை செலுத்துவது பற்றி கருத்துக்கள் தெரி விக்கப்பட்டன.

இதன் பிரகாரம் தமிழ் மக்கள் முகம் கொடுத்திருக்க முக்கிய பிரச்னையான காணி அபகரிப்பு, இன குடிப்பரம்பல் சிதைப்பு என்பவற்றை தற்காலிகமாக தடுத்து நிறுத்தும் முயற்சியாக ஐ. நா. பிரேரணையில் பரிந்துரைக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்று முழு தாக நிறைவேற்றுவது, மாகாணசபை தேர்தல்கள் சம்பந்தமாகவும் கலந்துரை யாடப்பட்டன.

தமிழர்கள் ஒருமித்த நிலைப்பாட்டில் சம்பந்தப்பட்ட தரப்புகளை வலியுறுத் தல் - அதன் முக்கியத்துவம், அதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அவற்றின் முன்னேற்றம், ஆதரவு தரப்புக் கள், எதிர்கால நகர்வுகள் என்பன பற்றி யும் விளக்கம் அளிக்கப்பட்டது. நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார சிக் கல்கள், தமிழ் மக்களும் நாட்டு மக்களும் முகம் கொடுக்கும் அவலங்கள், கோரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் தற்போதைய நிலை என பிற விடயங் களும் கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

ஈழநாடு
Eelanadu

# மழையுடன் அதிகரித்தது டெங்கு காய்ச்சல் அபாயம்!



**கொழும்பு, நவ. 19**

**டெங்கு காய்ச்சலால் வைத்தியசாலையில் சேர்க்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றது என சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை தெரிவித்துள்ளது.**

*நிலவும் மழையுடனான கால நிலையால் இந்த எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று வைத்திய சாலையின் பணிப்பாளர் மருத்துவர் ஜீ. விஜேசூரிய தெரிவித்துள்ளார்.*

*சாதாரணமாக நாளொன்றில் 5 டெங்கு நோயாளர்கள் பதிவாகி வந்த நிலையில், தற்போது ஒரு நாளில் 25 இற்கும் அதிகமானவர்கள் சேர்க்கப்படுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*எனவே, டெங்கு நோய் பரவல் தொடர்பில் பெற்றோரை அதிக கவனம் செலுத்துமாறு அவர் வலியுறுத்தியுள்ளார். (இ)*

## மரண அறிவித்தல்



அன்னை மடியில்
01.03.1948



கர்த்தருக்குள்
13.11.2021

### இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை

*(முன்னாள் நகரசபை தவிசாளர் 2011-2015)*

யாழ். சாவகச்சேரி கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இறப்பியல் தேவசகாயம்பிள்ளை அவர்கள் 13.11.2021 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இறப்பியேல் – கத்ரினா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆசிர்வாதம் – பினோசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செபமாலையம்மா அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மரிய இராபேல் (றஞ்சித்– பிரான்ஸ்), மரிய கத்தரீன் (றஞ்சினி – இலங்கை), மரிய அருள்ராணி (றமா– இலங்கை), மரியஜெறோம் (இலங்கை), மரிய நியூட்டன் (லண்டன்), மரிய பெனடிற்றா(லண்டன்), மரிய நிறோயன்(இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும்,வெயினி(பிரான்ஸ்), தர்மராஜா (நிசா– இலங்கை), நிமல்ராஜ்(சந்துரு– கட்டார்), மரிய கவி (இலங்கை), மரிய ஜெயரமணி(லண்டன்), நிமல்ராஜ் (லண்டன்), ஜெயசுதா (இலங்கை), ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மரியறோஸ், சிங்கராசா மற்றும் மொனிக்கம்மா(இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மரிய அருளானந்தம், பிரான்சிஸ்கா (பொன்னார்– இலங்கை), காலஞ்சென்றவர்களான அகுஸ்தீன், பொன்ராசா மற்றும் றோஸ்மேரி (இலங்கை), சூசையம்மா(இலங்கை), வேதநாயகம்(இலங்கை), காலஞ்சென்றவர்களான தேவதாஸ், விசிறித்தா மற்றும் மரிய பாலா (இலங்கை), கிறிஸ்தோப்பர் (இலங்கை), எமரஞ்சியா (இலங்கை), காலஞ்சென்ற மேரி அஞ்சலா, மேரி சறேஸ்சா (இலங்கை) காலஞ்சென்ற நேசராசா, மேரியசிந்தா(இலங்கை), உதயகுமார்(இலங்கை), தயாளராசா(இலங்கை), சாள்ஸ் றேபேட்(இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,மரிய பேணாட்(JP), மரியதாஸ்(கனடா), காலஞ்சென்ற மரிய அல்போன்ஸ், மரிய அருள்தாஸ்(கனடா), மரிய ஞானசீலன்(சுவிஸ்), மரிய அன்ரனி (இலங்கை), காலஞ்சென்ற மரிய யேசுதாசன், மரிய பொன்கலன்(பிரான்ஸ்), மரிய நவசீலன்(இத்தாலி), மரிய அல்வீனா(இலங்கை), ஞானேஸ்வரி(இலங்கை), சந்திரராசா (பிரான்ஸ்), தேவபரன்(இலங்கை), தேவபாலன் (பிரான்ஸ்), தேவகுமார்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மரிய கொறற்றி(சுவிஸ்), மரிய அன்ரனி (இத்தாலி), மரியநாயகி(சுவிஸ்), மரிய அஞ்சலா(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், மரிய அனுஸ்ரன்(இலங்கை), மரிய நிதர்சினி(பூஜா– லண்டன்), மரிய வினுஸ்ரன்(இலங்கை), மரிய நிதர்சன்(லண்டன்), அன்சன்(லண்டன்), நிக்கில் (இலங்கை), ஆன்ஷன்(லண்டன்), ஏஞ்சலினா(லண்டன்), நிசாறா(இலங்கை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**மரிய அருள்தாஸ்**
**Mobile : +14167106196**

தகவல்:
**குடும்பத்தினர்.**





## கீரிமலையில் முதியோர் இல்லம்

*யாழ்ப்பாணம், நவ. 19*

*சிவபூமி அறக்கட்டளை நிதியத்தால் கீரிமலையில் அமைக்கப்பட்ட முதியோர் இல்லம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.*

*துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகனின் முயற்சியின் பயனாக சிவபூமி அறக்கட்டளையினரால் முதியோர் இல்லம் அமைக்கப்பட்டு நேற்று பலரின் பங்குபற்றலுடன் வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.*

*இந்த நிகழ்வில் நல்லூர் ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள், யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராசா, யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (இ - 03)*

## பங்களாதேஷ் பிரதமரை நேரில் சந்தித்தார் பீரிஸ்



*கொழும்பு, நவ. 19*

*வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவைச் சந்தித்தார்.*

*பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் அமைந்துள்ள பிரதமர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.*

*இதன்போது கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சரால் பங்களாதேஷ் பிரதமருக்குத் தெளிவூட்டப்பட்டது.*

*நாட்டில் நிலவும் நீண்டகால பிரச்னைகள் தொடர்பிலும் பேராசிரியர் பீரிஸினால் பங்களாதேஷ் பிரதமருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கொழும்பு மற்றும் டாக்கா இடையில் விமானத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்தல் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்தல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)*












*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் : டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு- மறுஒளிபரப்பு

**பகல்**

12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-சிவா மனசில சக்தி, தர்பார் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**

7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -க. பொ.த சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்